[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 20–4–2023 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்கு பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Agenda-விற்குள் சென்றுவிட்டோம், உட்காருங்கள். (குறுக்கீடு) இனிமேல் அவ்வளவுதான். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) பதிலுரையைக் கேட்டு விட்டு நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான், முதலமைச்சர். (குறுக்கீடுகள்) ஆனால், (குறுக்கீடுகள்)

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

காரணம், இந்த அவை நாகரிகமாக நடந்து கொண்டிருப்பதை ஒருபோதும் அவர்கள் ஏற்கவில்லையோ என்றுகூட எனக்கு வருத்தமாக இருக்கின்றது. நிச்சயமாக, இந்த அரசு ஒளிவுமறைவில்லாமல், தெளிவாக, ஜனநாயக முறையில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு முதலில் இந்த அவையை, நம்மை தயார் செய்துகொண்டு, தொடர்ந்து படிப்படியாக நேரடி ஒளிபரப்பு நடைபெறும் என்பதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று அவையிலிருந்து வெளிநடப்பு செய்தது எனக்கு மிக்க வேதனையாக இருக்கின்றது, வருத்தமாக இருக்கின்றது. இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பதிலுரையாற்ற நான் அன்போடு அழைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், முதல்-அமைச்சர்! ஆனால், எனது துறையான உள் துறையின் மீதான மானியக் கோரிக்கைதான் அனைத்து துறைகளிலும் கடைசியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஏன் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். அனைத்துத்துறைகளும் உங்கள் துறைதானே என்று நீங்கள் நினைப்பதால்தான், அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தனது துறையின் சார்பிலான மானியக் கோரிக்கை விவாதத்தில் பதிலளித்துப் பேசியபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பேசிய ஒன்றை சுட்டிக்காட்டினார். பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் ஒவ்வொரு துறையையும் குறிப்பிட்ட தலைவர் கலைஞர் அவர்கள், நாம் வகிக்கக்கூடிய துறைகள் வேறுபட்டிருந்தாலும், நாம் அனைவரும் 'அண்ணாத்துரை'–யைச் சேர்ந்தவர்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைதான்.

எனக்கு தலைவர் கலைஞர் முதலில் வைக்க நினைத்த பெயர் என்னவென்றால், அய்யாத்துரை! எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும் தனித்தனி துறையை வகித்தாலும் நீங்கள் அனைவரும் இந்த அய்யாத்துரையின் இரத்த நாளங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இது ஏப்ரல் 2023, 2 ஆண்டுகளுக்கு முன்னால் இதே ஏப்ரல் மாதத்தில்தான் தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு முடிவெடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், வீழ்ந்து கிடக்கும் தமிழ்நாடு எழுச்சி பெறும்; (மேசையைத் தட்டும் ஒலி) "தாழ்ந்த தமிழ்நாடு தலைநிமிரும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று மக்கள் முடிவெடுத்தார்கள். மே 7 ஆம் நாள், "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்!" என்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் இரண்டு வார காலத்தில் இரண்டு ஆண்டு காலம் நிறைவடைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. இனி தமிழ்நாட்டை நிரந்தரமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆளவேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனநிறைவுடன் முடிவெடுக்கும் வகையில் இந்த இரண்டாண்டு காலமாக ஆட்சியை நடத்தி வருகிறோம் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

மிக மோசமான நிதி நெருக்கடி; நிதி மேலாண்மையில் ஒன்றிய அரசின் உதவியின்மை ஆகிய மிகக் கடினமான சூழல்கள் உள்ளபோதிலும், மகத்தான சாதனைகளை கழக அரசு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் செய்து கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் தமிழ்நாடு அரசு நன்மை செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர்க்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி செய்து தரப்பட்டதன் மூலமாக, இதுவரை 265 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை செப்டம்பர் மாதம் முதல் தர இருக்கிறோம். இதன் மூலமாக ஒரு கோடி மகளிர், மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்ட நலத் திட்ட உதவி விழாக்களின் மூலமாக மட்டும் ஒரு கோடி பேருக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 62 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறையை, நடப்பு மதிப்பீடுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைத்துள்ளோம்.

தமிழ்நாட்டை நோக்கி 2 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.

மாநில உள்நாட்டு உற்பத்தி 6.11 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

வேளாண் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. பாசனப் பரப்பும் அதிகமாகியிருக்கிறது.

இப்படி துறைவாரியாக நான் சொல்லத் தேவையில்லை. அனைத்து அமைச்சர்களும் அவற்றை விரிவாக, இதே அவையில், ஆதாரங்களோடு சொல்லி இருக்கிறார்கள். இப்படி துறைரீதியாகச் சாதனைகளை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசாக நமது அரசு அமைந்துள்ளது.

உதயசூரியன் உதிப்பதற்கு முன்னால் எழுந்து உழவுக்குச் செல்லும் உழவர்களின் முகத்தில் மலர்ச்சி இருக்கிறது. காரணம், இலவச மின்சாரம் கிடைக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21 முற்பகல் 10–50

காலை நேரத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது; காரணம், பள்ளியிலேயே காலை உணவு கிடைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு பணிகளுக்காக புறப்படும் மகளிர் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது; காரணம், பேருந்துகளில் கட்டணமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி மக்களுக்கு நேரடியாக தினமும் பலன் தரும் அரசாக தமிழ்நாடு அரசு இருக்கிறது. அதனால்தான் அவதூறுகளை யார் அள்ளி வீசினாலும், திசை திருப்பும் திருகுவேலைகளை யார் செய்தாலும், மக்கள் மனங்களை யாராலும் மாற்ற முடியவில்லை; ஏமாற்றவும் முடியவில்லை! (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தேர்தலில் மட்டும் வெல்லவில்லை; மக்களின் மனங்களை வென்று, அவர்கள் நெஞ்சங்களில் நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல. இது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனிப்பட்ட கட்சியின் அரசும் அல்ல. இது ஓர் இனத்தின் அரசாக (மேசையைத் தட்டும் ஒலி)–எட்டுக் கோடி மக்களின் அரசாக (மேசையைத் தட்டும் ஒலி)–ஒரு கொள்கையின் அரசாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் என்ற கோட்பாட்டின் அரசாக இருக்கிறது. சமூகநீதி–சமத்துவம்–சமதர்மம்–சகோதரத்துவம்–மொழி உரிமை–இன உரிமை–மாநில சுயாட்சி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய 'திராவிடவியல் கோட்பாடு' என்பதே திராவிட மாடல் சாசனம்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அய்யன் வள்ளுவரின் நெறியும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கும், திராவிட இயக்கத்தின் தீரர்களாம் சர் பிட்டி தியாகராயரும், டி.எம். நாயரும், நடேசனாரும் காட்டிய வழியும், தந்தை பெரியாரின் சுயமரியாதை சமதர்மமும், பேரறிஞர் அண்ணாவின் தமிழ்நாடு உரிமை முழக்கங்களும், தமிழினத் தலைவர் கலைஞரின் ஒடுக்கப்பட்டோர் சமூக நீதிச் செயல்பாடுகளும், இனமான பேராசிரியரின் மொழி, இன உரிமை வழிகாட்டுதல்களும், என்னுள் இருந்து என்னை இயக்கிக் கொண்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

இவைதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைக்கும், கம்பீரத்துக்கும், வெற்றிக்கும், துணிச்சலுக்கும் காரணங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அரசு, மக்கள் நல அரசாகவும் இருக்க வேண்டும், அதேநேரத்தில் கொள்கை அரசாகவும் இருக்க வேண்டும். மக்களுக்கான உதவிகளை மட்டும் செய்துவிட்டு, கோட்பாடுகளில் இருந்து விலகிச் சென்றுவிடக் கூடாது. ஒரு பக்கம் மக்கள் நலன், இன்னொரு பக்கம் கொள்கை உரம். இவை இரண்டையும் முன்னெடுக்கும் ஆட்சியாக இரண்டாண்டுகளை நாம் நிறைவு செய்யப்போகிறோம்.

இது இந்தியாவையே ஈர்க்கும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பது,என்னுடைய பெருமை மட்டுமல்ல; இந்த அமைச்சரவையின் பெருமை! எங்களுக்குத் தோளோடு தோள் சேர்த்து நிற்கும் இந்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுடைய பெருமை! (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நாங்கள் கவனிக்கத் தவறும் இடங்களைச் சுட்டிக்காட்டும் உரிமை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால், அந்தக் கடமையிலிருந்து தவறி என்ன நிலைக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் எனக்கும் வேதனையாக இருக்கிறது. இருந்தாலும், அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவை பல ஆரோக்கியமான விவாதங்களைக் கண்டிருக்கிறது.

அதேபோன்ற ஆரோக்கியமான விவாதமாகவே உங்கள் அனைவரது உரைகளையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆதரித்தாலும், எதிர்த்தாலும் மக்களுக்காகத்தான் பேசுகிறீர்கள் என்று எடுத்துக்கொள்பவனாக, ஏற்றுக்கொள்பவனாக நான் இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியராய் இருந்து, இந்த அவைக்குத் தலைமை ஆசிரியராக மட்டுமல்ல, சட்டமன்ற நெறிமுறைகளுக்கு ஆசானாகவும் திகழ்ந்து வரும் மாண்புமிகு பேரவைத் தலைவரான தங்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! உள்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் 12 பேர் பேசி இருக்கிறார்கள். பாராட்டிப் பேசி இருந்தாலும், விமர்சித்துப் பேசி இருந்தாலும், இரண்டு தரப்புக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில காவலர்களின் செயல்பாடுகள் குறித்து, இங்கே விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

இதுபற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை, இதே அவையில் பேசியதை, நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

"எந்த சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடியாக, அந்தப் படையினர் விளங்குவார்கள். அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகி இருப்பது இல்லை.

போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல் போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறு இழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன. தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். முரண்பாடு ஏற்படுகின்ற இடங்களில் எல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டி இருக்கிறது.

சகல விதத்திலும் சகிப்புத் தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பெற்ற பயிற்சிக்கு ஒப்ப, கடமை உணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படித்தான் காவல் துறையினர் நடந்து வருகிறார்கள்.

அவர்களது செயல்பாட்டில் குற்றங்குறைகள் இருக்கலாம். குறையே இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். குறை கண்டுபிடிக்கப்பட்டதும், அவை திருத்தப்பட்டனவே தவிர,

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

கண்டும் காணாமல் விடப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சம்பவம் நடந்ததும், குற்றவாளி தப்பிவிட்டார் என்றோ, குற்றவாளியைக் கைது செய்யவில்லை என்றோ, குற்றவாளியைக் காப்பாற்றினார்கள் என்றோ புகார் இருந்தால், சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன். அதில் நான் உறுதியாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் குற்றவாளியையும், அது யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட கொம்பனாக இருந்தாலும் அவர்களை, நாங்கள் நிச்சயமாகக் காப்பாற்ற மாட்டோம் என்று இந்த மாமன்றத்தில் உறுதியாகக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறு சிறு தவறுகள் நடந்திருந்தாலும், அதனைத் திருத்திக்கொள்ளும் பண்பை காவல் துறையினர் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் இந்த மாநிலத்தில் என்னென்ன இருக்கிறது என்று பேசினார்கள். என்னென்ன இல்லை என்பதைச் சொல்வதாக எனது உள்துறை அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மதச் சண்டைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டு வன்முறைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கலவரங்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) துப்பாக்கிச் சூடு இல்லை. காவல் நிலைய மரணங்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இல்லை, இல்லை, இல்லை...என்றுதான் என்னால் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதெல்லாம் இல்லை என்பதற்கு அடையாளமாகத்தான், புதிய தொழிற்சாலைகள் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) புதிய முதலீடுகள் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) புதிய நிறுவனங்கள் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியும் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு நல்ல பெயர் வருகிறது. "அமைதியான மாநிலம் தமிழ்நாடு" என்ற நற்பெயர் வருகிறது. ஒரு மாநிலம் வளருகிறது என்றால், அது அமைதியான மாநிலமாக இருக்கிறது என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சட்டம்-ஒழுங்கைப் பேணி, பொதுமக்களிடம் அச்ச உணர்வைப் போக்கி இருக்கிறது நமது அரசு. எந்தவிதக் குறுக்கீடும் இன்றி

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

காவல் துறையைச் செயல்பட அனுமதித்துள்ளோம். இதனால்தான் சமூகவிரோதிகள், கொள்ளையர்கள், வன்முறையாளர்கள் உடனுக்குடன் கைது செய்யப்படுகிறார்கள்.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை"

என்கிறார் வள்ளுவர். அதாவது, ஒருவர் செய்த குற்றங்களை எப்பக்கமும் சாயாமல், நடுநிலையோடு பாரபட்சமின்றி ஆராய்ந்து, குற்றத்திற்கு தக்க தண்டனையை வழங்குதல் நீதியாகும் என்ற அய்யன் வள்ளுவரின் வாக்குப்படி, அரசு செயல்பட்டு வருகிறது. மாநில காவல் துறையினர் சட்டம்—ஒழுங்கை, தொடர்ந்து சிறப்பாகப் பராமரித்து வருவதோடு, குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். தமிழ்நாட்டில் சாதி, சமய வெறியர்கள், சமூக விரோதிகள்மீது அரசு மேற்கொண்ட கடும் நடவடிக்கைகள் காரணமாக, சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி மாநிலத்தில் அமைதி நிலவி வருகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறையினர், மாநிலம் முழுவதும், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் ரவுடிகள் மற்றும் கொள்ளையர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து கொலை, கொள்ளை மற்றும் சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீதும், ஆட்களை கடத்தி பணம் பறித்தல், தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் விற்பனை, மணல் மற்றும் ரேஷன் அரிசி கடத்துதல், கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடுதல், அதிக வட்டி வசூலித்தல் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர்கள் மீதும், கஞ்சா, நிதி நிறுவன மோசடி, சைபர் குற்றங்கள், சமூக வலைதளங்களில் வதந்திகளைப் பரப்புவோர் ஆகியோர்மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, அவர்களைத் தடுப்புக் காவலில் அடைத்து வருகின்றனர். குற்றம் நடந்ததும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதால், குற்றங்கள் குறைந்துள்ளன. மிகப் பெரிய மோதல் ஒன்று, அரசின் வேகமான நடவடிக்கைகளால் எப்படி தவிர்க்கப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டுதான், வட மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று பரப்பப்பட்ட வதந்திகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

தமிழ்நாட்டில், பீகார், அசாம், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் தங்கள் தொழில்களில் ஈடுபடும் வண்ணம் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்கிடையேதான், அந்தவதந்தி தமிழ்நாட்டில் பரப்பப்பட்டது. இதுகுறித்து, என்னுடைய தலைமையிலே அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இவ்வாறு வதந்தி காணொலிகளைப் பரப்புவோர்மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டேன்.

வட மாநிலங்களில், இரு பிரிவினரிடையே நடைபெற்ற மோதல் சம்பவத்தை தமிழ்நாட்டில் நடந்தது போன்று சித்தரித்துக் காட்டியுள்ளதாக, காவல் துறை இயக்குநர் அவர்கள் உடனடியாக விளக்கம் தந்தார். அந்தந்த மாவட்ட நிர்வாகத்தினரும், காவல் துறையினரும், வட மாநிலத்தவர்கள் அதிகம் பணிபுரியக்கூடிய இடங்களில், குறிப்பாக உணவு விடுதிகள், கட்டுமான நிறுவனங்கள், பல்வேறு தொழிற்சாலைகள் போன்றவற்றிற்குச் சென்று, புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தி, அவர்களது அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பீகார் மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. நிதீஷ் குமார் அவர்களை தொலைபேசியில் நானே தொடர்புகொண்டு, வட மாநிலத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரக்கூடிய பாதுகாப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் 7-3-2023 அன்று மாண்புமிகு பீகார் முதலமைச்சர் அவர்களை நேரடியாகச் சென்று சந்தித்து, வட மாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு மாநில அரசு மேற்கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகள் குறித்துப் பேசியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

பீகார் மாநிலத்தினுடைய ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. பாலமுருகன் அவர்கள் தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு தமிழ்நாட்டிற்கு வந்து சென்னை, திருப்பூர், கோயம்புத்தூர் உள்ளிட்ட இடங்களில், மாவட்ட ஆட்சியர்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

உள்ளிட்ட அதிகாரிகளோடு கலந்தாலோசனை செய்ததோடு, பீகார் மாநிலத் தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசினார்கள். இந்தக் குழுவினர் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததோடு, அதுகுறித்து பத்திரிகைகளுக்குப் பேட்டியும் அளித்திருக்கிறார்கள்.

7-3-2023 அன்று திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு பகுதியில் வட மாநிலத் தொழிலாளர்களை நானே நேரடியாகச் சந்தித்து, அவர்களின் பாதுகாப்புக்காக அரசு மேற்கொண்டு வரக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினேன். இந்த விவகாரம் தொடர்பாக, இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை, மொத்தம் 88 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 178 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு காவல் துறையின் தனிப் படையினர், தெலங்கானா, பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களுக்கு நேரடியாகச் சென்று, பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ரூபேஷ் குமார் என்பவரை 6-3-2023 அன்று தெலங்கானாவிலும், பிரசாந்த் குமார் என்பவரை 11-3-2023 அன்று ஜார்கண்ட் மாநிலத்திலும், உபேந்திர சஹானி என்பவரை 18-3-2023 அன்று பீகாரிலும் கைது செய்து தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்தனர். வதந்தி காணொலியைப் பரப்பிய உத்தரப் பிரதேச மாநில பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் பிரசாந்த் உம்ராவ் என்பவர்மீதும் வழக்குத் தொடரப்பட்டு, உயர் நீதிமன்ற ஜாமீன் பெற்றுள்ளார்.

அதுமட்டுமின்றி, யூடியூப் சேனல் நடத்தி வரக்கூடிய பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மணிஷ் காஷ்யப் என்பவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். எதிர்காலத்தில் சமூக வலைதளங்களில் பரப்பப்படக்கூடிய வதந்திகளால் உலகளவில், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை பெருமளவில் இருக்கும் என்று பரவலாகக் கூறப்படக்கூடிய இந்த நிலையில், வட மாநிலத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை, பிற மாநில அரசுகளும் மனம் திறந்து பாராட்டின. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

முன்னணி ஊடகங்களான 'டைம்ஸ் ஆப் இந்தியா' தலையங்கம் எழுதியது; 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'ஃபிரன்ட் லைன்' போன்ற

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

இதழ்கள் பாராட்டியும் கட்டுரைகள் எழுதியிருக்கின்றன. மாநிலத்தின் வளர்ச்சிக்கு வட மாநிலத் தொழிலாளர்களின் பங்களிப்பை இந்த அரசு நன்றாக உணர்ந்துள்ளது.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை நமது மாநிலத்திற்கு வந்துள்ள விருந்தினர்களைப்போல கருதி, அவர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மாநில அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்ததால்தான் தமிழ்நாட்டிலும், சில வட மாநிலங்களிலும் கொந்தளிப்பு எழாமல் தவிர்க்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பொறுத்தவரையில், போராடிய மக்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது யார் ஆட்சியில் என்பதையும், அதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஆணையம் அமைத்து, விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது எந்த ஆட்சியில் என்பதையும், இந்த மாமன்ற உறுப்பினர்களும், தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். அதைப் பற்றியெல்லாம் விளக்கமாகப் பேசி, மீண்டும் ஒருமுறை விவாதத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், நேற்று இந்த அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டைப் பற்றிப் பேசினார். நான் ஒரே ஒரு கேள்வி மட்டும் எழுப்ப விரும்புகிறேன். அறையிலிருந்து கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். ஆக, அந்த உரிமையோடு நான் அவரைப் பார்த்து ஒரு கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். 100 நாட்கள் அமைதியாக நடந்த அந்தப் போராட்டத்தில், துப்பாக்கிச்சூட்டிற்கு உத்தரவிட்டது யார்? (மேசையைத் தட்டும் ஒலி) அதை மட்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஏன் சொல்லவே மாட்டேன் என்கிறார். முதலமைச்சராக இருந்தபோதும் சொல்லவில்லை; இப்போது எதிர்க்கட்சித் தலைவர் ஆன பின்பும் அவர் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நமது அரசைப் பொறுத்தவரை துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் பொது மக்கள் ஒருவர்கூட உயிரிழக்காதவாறு சட்டம்-ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு வருகிறது. 12-7-2022 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கனியாமூர் தனியார் பள்ளி மாணவி உயிரிழந்ததையடுத்து நடந்த தாக்குதல் சம்பவத்தை காவல் துறையினர் திறமையாகக் கையாண்டதோடு,

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

உயிரிழப்பு ஏதும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டனரே! அதுவே ஓர் அரசு மக்கள் போராட்டத்தை எப்படி பொறுப்புடன் கையாள வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் நிலைய மரணங்களைத் தடுப்பதைப் பொறுத்தவரையில், அதிலும் இந்த அரசு சாதனை படைத்துள்ளது.

2019 ஆம் ஆண்டு 11 காவல் நிலையங்களில் 11 நபர்கள் இறந்த நிலை மாற்றப்பட்டு, 2023 ஆம் ஆண்டு இதுநாள் வரையில், காவல் நிலைய மரணங்கள் ஏதும் நடைபெறவில்லை என்ற நிலையை அடைந்துள்ளோம். கடந்த ஆட்சியோடு ஒப்பிடும்போது, தற்போதைய ஆட்சியில் காவல் நிலைய மரணங்கள் பெருமளவில் குறைந்துவிட்டன. காவல் நிலைய மரணங்களே இல்லை என்ற நிலையை அடைவதற்கான வழிவகைகளில் இந்த அரசு நிச்சயம் ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களைத் தடுப்பதே இந்த அரசின் முக்கிய இலக்கு. அதையும் மீறி அங்கும் இங்குமாக ஓரிரு இடங்களில் நடைபெறக்கூடிய குற்றங்களிலும், வழக்கமாக நடைபெறும் குற்றச் சம்பவங்களிலும் குற்றவாளிகள் உடனுக்குடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தீவிரவாத, மதவாத, தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்தும், மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகள் அமைத்தும், கடலோர மாவட்டங்களில் சோதனைகளைத் தீவிரப்படுத்தியும், மலைப் பகுதிகளில் உள்ள வனப் பகுதிகளில் அடிக்கடி தீவிர சோதனைகள் நடத்தியும், தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளைக் காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 23-10-2022 அன்று கோயம்புத்தூர் உக்கடம் பகுதியில் நடந்த கார் சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டதோடு, சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் உடனடியாக கைது செய்யப்பட்டனர். மேலும், 26-10-2022 அன்று எனது தலைமையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில், வழக்கில் மாநிலம் தாண்டிய பரிமாணங்களும், பன்னாட்டுத் தொடர்புகளும் இருக்க வாய்ப்பு இருந்ததால், இவ்வழக்கை தேசியப் புலனாய்வு முகமைக்கு மாற்றிட ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

மூன்றே நாட்களில் ஒரு மாநில அரசு இதுபோன்ற வழக்கை தேசியப் புலனாய்வு முகமை விசாரணைக்கு மாற்றியது என்றால், அது தமிழ்நாடு அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுதான் இவ்வளவு விரைவாக வழக்கினை மாற்றியிருக்கும். மேலும், கோயம்புத்தூர் மாநகரின் பாதுகாப்பைக் கருதி, கரும்புக்கடை, சுந்தராபுரம், கவுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் அமைக்கவும், இத்தகைய சம்பவங்களைத் தடுக்க காவல் துறையில் சிறப்புப் படையை உருவாக்கவும், கோயம்புத்தூர் பகுதியில் முக்கிய இடங்களில் கூடுதல் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தவும் முடிவுகள் எடுக்கப்பட்டன. தமிழ்நாடு காவல் துறை நுண்ணறிவுப் பிரிவின் ஓர் அங்கமாக விளங்கும் சிறப்புப் பிரிவின் நுண்ணறிவுத் தகவல்களின்படி விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன்மூலம் மதரீதியான மோதல்கள் எதுவுமின்றி தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது.

முற்பகல் 11–10

தீவிரவாத அமைப்புகளின் மூளைச் சலவையில் இருந்து இளைஞர்களைக் காக்க சமய அறிஞர்கள், உளவியல் நிபுணர்கள் மற்றும் பெற்றோர்கள் உதவியோடு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, 2022–2023 ஆம் ஆண்டில் 20 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு சிறப்பாகச் செயல்பட்டுவருவது குறித்த புள்ளிவிவரத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் தாக்கலான; 182 ஆதாயக் கொலை வழக்குகளில், 171 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 194 கொலை வழக்குகளில், 3 ஆயிரத்து 144 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 252 கூட்டுக் கொள்ளை வழக்குகளில், 242 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 5 ஆயிரத்து 281 கொள்ளை வழக்குகளில், 4 ஆயிரத்து 240 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 874 வன்புணர்வு வழக்குகளில், 849 வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 90 பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில், 75 வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 9 ஆயிரத்து 440 போக்சோ வழக்குகளில் 9 ஆயிரத்து 340 வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த அரசின் விழிப்புணர்வு பிரச்சாரங்களால், குற்றம் நடைபெற்றவுடன் புகார் கொடுக்க மக்கள் முன்வருகிறார்கள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

காவல் நிலையங்களில் "வரவேற்பாளர்" நியமனம், காவல் துறையின் மனிதநேய அணுகுமுறை போன்றவற்றால் பதிவு செய்யப்படும் வழக்குகள், அதிலே ஒரு சில குற்றங்கள் அதிகரிக்கலாம். அதற்குக் காரணம், புகார்கள் வரும்பொழுது கடந்த ஆட்சியில் இழுத்தடித்ததுபோல் இல்லாமல், இப்போது உடனடியாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மூடி வைக்காமல் உடனடியாக விசாரித்து குற்றவாளிகளும் தண்டிக்கப்படுகிறார்கள். எதிரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் மேற்கண்ட புள்ளிவிவரங்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்பொழுது, ஆருத்ரா போன்ற நிதி நிறுவனங்களின் மோசடிகள் பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். நான் நேற்றே இதுகுறித்து விளக்கமாகப் பல்வேறு விளக்கங்களை அளித்திருக்கிறேன். இருந்தாலும் ஒன்றை மட்டும் அழுத்தமாக நான் சொல்ல விரும்புவது, மக்களிடம் ஆசையைத் தூண்டி இதுபோன்ற நிறுவனங்கள் ஏமாற்றுகின்றன. இத்தகைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் கண்காணிக்குமாறு காவல் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இத்தகைய நிதி நிறுவனங்களின் மோசடிகளைத் தடுக்க முதன்முதலில் சட்டம் கொண்டு வந்ததும், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இதுபோன்ற நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும்போது பொதுமக்கள் எச்சரிக்கையோடும், விழிப்புணர்வோடும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சில முக்கியமான குற்றச் சம்பவங்களில் உரிய நடவடிக்கை எடுக்காததால், தி.மு.க. ஆட்சி அமைந்ததும் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொள்ளாச்சி பாலியல் புகார் வழக்கும் சென்ற ஆட்சியினுடைய "தலைப்புச் செய்திகளுள்" ஒன்று என்று உறுப்பினர்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். இந்த விவகாரத்தில் காவல் நிலையத்தில்

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

வழக்குப் பதிவு செய்யவே பொது மக்கள் ஒரு பக்கம் போராடினார்கள். அரசியல் கட்சிகள் ஒரு பக்கம் போராடினார்கள். தி.மு.க. கட்சி ஒரு பக்கம் போராடியது. தன்னார்வத் தொண்டு அமைப்பைச் சார்ந்தவர்கள் எல்லோரும் போராடினார்கள். அப்படி ஒரு நிலை சென்ற ஆட்சியில் ஏற்பட்டது. பிறகு, மாநில குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, அங்கும் முறைப்படி விசாரிக்காத காரணத்தாலே மீண்டும் அதற்காகப் போராடி, அந்த வழக்கை சிபிஐ-க்கு கொண்டு போனோம். இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரில், அ.தி.மு.க. இளைஞரணி நிர்வாகி ஒருவரும் உண்டு. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை ஒழிக்க விரும்பக்கூடிய கழக அரசு பொறுப்பேற்றவுடன், சிபிஐ விசாரணைக்கு உதவி செய்ய தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு பெண் எஸ்.பி.-யை நியமித்தோம். 19 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பு நீதிமன்றம் அமைத்தோம். அந்தச் சிறப்பு நீதிமன்ற வளாகத்தில் சிசிடிவி கண்காணிப்பு, காணொலி விசாரணை அறை, நீதிபதி அறை, சாட்சிகளுக்கான தனி பாதுகாப்பு அறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டன.

முற்பகல் 11-15

மூன்று மாதங்களுக்கு முன்பு நீதிமன்ற விசாரணை துவங்கப்பட்டு, 80 சாட்சிகளில் இதுவரை 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தவர்கள் உரிய தண்டனை பெற இந்த அரசு வழக்குகளின் அடிப்படையில் விசாரணையை உன்னிப்புடன் கண்காணித்து விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று பேசும்போது, 'கொடநாடு வழக்கை நாங்கள் CBI-க்கு கொண்டு போக கோரிக்கை வைக்கப் போகிறோம்' என்றார். இந்த சம்பவம் நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சியில். கொடநாடு பங்களா என்பது, அந்தக் கட்சியின் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் "முகாம் அலுவலகமாக" பயன்படுத்திய பங்களா. அங்கு மர்மமான முறையில் கொலை, கொள்ளை, தற்கொலை, விபத்து எல்லாம் நடந்தன.

அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே முறையாகக் கண்டுபிடித்திருந்தால், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

எதிர்க்கட்சித் தலைவர் இப்போது வைத்திருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சம்பவம் நடந்ததும், உடனடியாக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, தடயங்களையும் காப்பாற்றி, வாக்குமூலங்களையும் முறையாகப் பெற்று வைத்திருந்தால், வழக்கை விரைந்து முடித்திருக்க முடியும்.

ஆண்டுகள் பல உருண்டோடியதால், சில விஷயங்களை முழுமையாக வெளிக்கொண்டுவர தாமதம் ஏற்படுகிறது. ஆனாலும், சிபிசிஐடி விசாரணையில் முக்கியத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, 2021 செப்டம்பர் 9 ஆம் தேதி பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "கொடநாடு வழக்கை நடத்துங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை; புது விசாரணை செய்யுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை" என்று சொன்னார்கள். அவரே ஆகஸ்ட் 18 ஆம் தேதி பேசும்போது, 'வழக்கு முடியும் தருவாயில் இருக்கும்போது எதற்காக மேல் விசாரணை செய்ய வேண்டும்?' என்று பேட்டியும் கொடுத்தார்கள். இப்போது CBI-க்குப் போவேன் என்கிறார். எத்தனை முரண்பாடு? ஏன் இந்தத் தடுமாற்றம்?

இன்னொன்றையும் குறிப்பிட்டுள்ளார். கொடநாடு வழக்கில் சம்பந்தப்பட்ட சயனுக்கு தி.மு.க. வழக்கறிஞர்கள் உதவி செய்தார்கள் என்று கூறியிருக்கிறார். சம்பந்தப்பட்ட எதிரிகள் 11-1-2019 அன்று புதுடெல்லியில் தெஹல்கா பத்திரிகையாளர், மேத்யூ சாமுவேல் என்பவரோடு பத்திரிகையாளர்களைச் சந்தித்து, கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில், அப்போது முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்மீது குற்றம் சாட்டினார்கள். உடனே அதிகாரத்தைப் பயன்படுத்தி, அச்சுறுத்தும் வகையில் அவர்கள்மீது வழக்கு புனைந்தது யார்? ஒரு முதலமைச்சர்மீது புகார் கூறுவோர்மீது பொய் வழக்கு போடும்போது, பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அன்று இருந்த தி.மு.க.வின் வழக்கறிஞர்கள் சட்ட உதவியைச் செய்தார்கள். இதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களின் பங்களாவில் நடைபெற்ற கொலை, கொள்ளையை அவர் கட்சியின் முதலமைச்சராக இருந்தவரே மறைக்க முயலும்போது, தி.மு.க. எப்படி சும்மா இருக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கொடநாடு வழக்கில் உண்மை குற்றவாளிகள்

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

யார், முறையாக விசாரணையை நடத்தாமல் திசைதிருப்பியது யார் என்பதை எல்லாம், உறுதியாகச் சொல்கிறேன்; நிச்சயமாகச் சொல்கிறேன்; CBCID விசாரணையில் வெளிவரும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சி விட்டுச் சென்ற "பேரழிவுகளில்" போதைப் பொருட்கள் நடமாட்டமும் ஒன்று. 10 ஆண்டு ஆட்சியில் இருந்தவர்கள் விட்டுச் சென்ற படு பாதகங்களில் ஒன்றுதான், இந்தச் சீரழிவுக்குக் காரணம். அதனால்தான் ஆட்சிக்கு வந்தவுடன் முதலில் "ஆபரேஷன் கஞ்சா வேட்டைகள்" அடுத்தடுத்து தொடங்கப் போவதை அறிவித்து, போதைப் பொருட்களையெல்லாம் கைப்பற்றினோம்.

போதை மருந்துகள் மற்றும் உள வெறியூட்டும் பொருட்கள் சட்டம், 1985-ன்படி, கஞ்சா விற்போரின் சொத்துகள் மற்றும் வங்கிக் கணக்குகளை முடக்குவது ஓர் இயக்கமாகவே தொடங்கப்பட்டது. போதைப் பொருட்களை ஒழிக்க என் தலைமையில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. முதலமைச்சரின்கீழ் இதற்காக ஆய்வுக் கூட்டம் தனியாக நடத்தப்பட்டது இதுதான் முதல் முறை. இதுவரையில் இதுபோன்ற ஒரு கூட்டம் நடந்ததே கிடையாது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, என் தலைமையில் நடைபெற்ற கூட்டம்தான் முதல் கூட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி தொடர் நடவடிக்கைகளின் பலனாக, இன்று கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில காவல் நிலைய எல்லைகளில் போதைப் பொருட்களே இல்லை என்ற நிலை எட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–20

வெளி மாநிலங்களிலிருந்து கஞ்சா மற்றும் போதைப்பொருட்கள் தமிழ்நாட்டிற்கு கடத்தப்படுவதை தடுக்கும்பொருட்டு, தற்போது மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவுடன் ஒன்றிணைத்து அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக அமலாக்கப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை உருவாக்கப்பட்டுள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

பள்ளி, கல்லூரி மாணவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, 11-8-2022 அன்று ஒரே நாளில் 74 இலட்சம் மாணவர்கள் "போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழியை" எடுத்துக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு உலக சாதனை நிகழ்வாக அமைந்தது; அதில் நானும் கலந்து கொண்டேன். ஆகவே, அனைத்து முனைகளிலும் சட்டத் துணையுடன் அரசு நடத்தும் இந்தத் தாக்குதலில், பத்தாண்டு காலமாக வேரூன்றியிருந்த "போதைப் பொருட்கள் சாம்ராஜ்யம்" சரிந்துள்ளது. அதுதான் இந்த அரசினுடைய சாதனை! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையில் அமர்ந்து திட்டங்களைத் தீட்டினால் மட்டும் போதாது; அவையெல்லாம் தானாக நடந்துவிடும் என்று நினைக்காமல், மக்களுக்கு நெருக்கமாகச் சென்று திட்டங்களைக் கண்காணிக்கவும் வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற திட்டத்தை நான் தொடங்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டங்களுக்கே நேரடியாகச் சென்று, தொடர்புடைய அதிகாரிகளை அழைத்துப் பேசி வருகிறேன். இது அனைத்துத் துறைகளிலும் ஒரு நல்ல விளைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இதில் காவல் துறை செயல்பாடுகள் தொடர்பாக தனி ஆய்வுக் கூட்டமே நடத்துகிறேன். வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டக் காவல் துறை அதிகாரிகளுடன் நேரடி ஆலோசனைகள் நடத்தியிருக்கிறேன். இந்த ஆய்வுக் கூட்டங்களின்போது, நிலுவையில் உள்ள முக்கிய வழக்குகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள் என குற்ற வழக்குகள் தொடர்பான தகவல்கள் மட்டுமின்றி, காவலர் மற்றும் பொது மக்கள் நலனில் காவல் துறையின் பங்கு குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின்போது வழங்கப்பட்ட அறிவுரைகளின் காரணமாக, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் காவல் நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உயரதிகாரிகள் எனக்கு அடிக்கடி தகவல் தந்து கொண்டிருக்கிறார்கள்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

கடந்த மூன்று மாதங்களுடன், சென்ற ஆண்டின் முதல் மூன்று மாத சராசரியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கொலை சம்பவங்கள் 13 விழுக்காடு குறைந்துள்ளன; (மேசையைத் தட்டும் ஒலி) கொள்ளை சம்பவங்கள் 18 விழுக்காடு, (மேசையைத் தட்டும் ஒலி) கன்னக் களவு 11 விழுக்காடு, (மேசையைத் தட்டும் ஒலி) கலவர வழக்குகள் 26 விழுக்காடு குறைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, முக்கிய வழக்குகளில் புலன் விசாரணையை தீவிரப்படுத்துதல், போதைப் பொருட்கள் நடமாட்டம் தொடர்பாக தொடர் சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், நிலுவையில் உள்ள பிடியாணைகளை நிறைவேற்றுதல், பொது மக்கள் மற்றும் காவலர் குறை தீர்ப்பு முகாம்களை காவல் கண்காணிப்பாளர்கள் முறையாக நடத்தி மனுக்களுக்குத் தீர்வு காணுதல், காவலர் வரவேற்புத் திட்டம் மற்றும் வார ஓய்வுத் திட்டம் ஆகியவற்றை முறையாக அமல்படுத்துதல் போன்றவற்றில் கூடுதல் ஈடுபாட்டுடன் செயல்படுவதாக நான் அறிகிறேன்.

இத்தகைய களஆய்வின்போது காவல் நிலையங்கள் உள்ளிட்ட எந்த அரசு அலுவலகங்களிலும் நான் திடீர் சோதனை மேற்கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் காவல் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களின் செயல்பாடுகளில் புது வேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 29-9-2021 அன்று தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டை காவல் நிலையத்திற்கும், 15-4-2022 அன்று அம்பத்தூர் காவல் நிலையத்திற்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு, வழக்குகளின் பதிவேடுகள், பொது மக்கள் அளித்த புகார்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, உரிய அறிவுரைகளை வழங்கினேன். இவை அனைத்தும் காவல் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் ஆட்சிக்குமான நெருக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களுக்குத் தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டுமல்ல, குற்றங்கள் நடைபெறாமல் (மேசையைத் தட்டும் ஒலி) தடுக்கும் துறையாகக் காவல் துறை செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறேன். அந்த வகையில் காவல் துறையின்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

செயல்பாடு காரணமாக குற்றங்கள் நாளுக்குநாள் குறைந்து வருகின்றன. குற்றங்களைத் தடுக்க காவலர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் (Body worn Camera) வழங்கப்பட்டுள்ளன.

தி.மு.க. ஆட்சி அமைந்த பின்னர் காவல் துறையில், 1) ஸ்மார்ட் காவலர், 2) முகம் அடையாளம் காணும் திட்டம் (Face Recognition System), 3) தேசிய கைரேகை அடையாளம் காணும் திட்டம் (National Fingerprint Identification System), 4) காவல் உதவி செயலி, 5) Senior Officer பெட்டிஷன் சிஸ்டம், 6) E–Office, 7) பந்தோபஸ்து மேனேஜர், 8) Road Safety Portal, 9) Drones– என புதுமையான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் ஒரு சில திட்டங்கள் முன்பு அறிவிக்கப்பட்ட பழைய திட்டங்களாக இருந்தாலும், இங்கே, நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 45 நிமிடங்கள் அவர்களுடைய ஆட்சியில் என்ன நடந்தது, என்ன திட்டம் தீட்டினார்கள் என்று பட்டியல் போட்டார். ஆனால், அதுவெல்லாம் எந்த நிலையில் இருந்தது என்று சொல்லவில்லை. செயல்படாமல் இருந்த நிலையையெல்லாம் இன்றைக்கு நாங்கள் சீர்படுத்தி, அதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, முன்பு அறிவிக்கப்பட்ட பழைய திட்டங்களாக இருந்தாலும், அவர்கள் அறிவித்தார்களே என்று கிடப்பில் போட்டுவிடவில்லை. அதை இன்றைக்கு முறைப்படுத்தி, அதையெல்லாம் இப்போது அரசு முழு வீச்சில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

தமிழ்நாட்டைக் காவலர்கள் பாதுகாக்கும்போது அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதை நான் நன்றாக அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழக ஆட்சிக் காலத்தில் காவலர் நலன் எப்போதும் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. காவலர் நலன் காக்க, தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, கலைஞர் எப்போதெல்லாம் முதலமைச்சராகவருகிறாரோ, அப்போதெல்லாம் ஆணையங்கள் மூன்று முறை அமைக்கப்பட்டுள்ளன. காவல் துறைக்காக, காவல் துறையினுடைய சீர்திருத்தத்திற்காக ஆணையங்கள் அமைக்கப்பட்டன.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

கடந்த ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான், காவல் ஆணையம் அமையுங்கள், அமையுங்கள் என்று பலமுறை இதே அவையில் கோரிக்கை வைத்தேன். அமைக்கப்படும் என்று அன்றைய முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார். ஆனால், அந்த நான்காவது காவல் ஆணையத்தையும் முறையாக அமைக்கவில்லை. பெயருக்கு அறிவித்தார்கள். அதை முறையாக அமைக்கவில்லை; செயல்படவும் இல்லை. எனவே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சி.டி. செல்வம் அவர்கள் தலைமையில் ஐந்தாவது காவல் ஆணையத்தையும் புதிதாக அமைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த ஆணையத்தின் இடைக்கால அறிக்கை 17-3-2023 அன்று பெறப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையிலான நடவடிக்கைகளை இன்றைய அறிவிப்புகளில் நீங்கள் காணலாம். மேலும், முழு அறிக்கை வந்தவுடன், காவலர் நலன் காக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் உறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களுக்கு வரும் பொது மக்களை இன்முகத்தோடு வரவேற்று குறைகளைக் கேட்டறிய ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் (Receptionist) நியமிக்கப்பட்டனர். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணிக்கு மறைந்த காவலர்களினுடைய வாரிசுகள் 1,132 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 1,088 நபர்களுக்கு இதுவரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

13-6-2021 முதல் முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் வழிக்காவல் பணியிலிருந்து பெண் காவலர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. அவர்களுக்கு இலகுவான பணிகளை வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

9-11-2021 முதல் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு தற்போது வழங்கப்படும் வீடுகளின் அளவைவிட, விகிதாச்சாரப்படி உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

10-11-2021 முதல் காவல் ஆளிநர்கள் தற்செயல் விடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கும் மென்பொருள் "CLAPP", அது ஒரு APP. "CLAPP" 10 இலட்சம் ரூபாய் செலவில் அமல்படுத்தப்பட்டது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

16–11–2021 அன்று காவலர்களுக்கு காவல் நிலையங்களில் உடற்பயிற்சி மேற்கொள்ள 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகரங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் 90 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

காவல் துறையினரின் நலன்களைப் பாதுகாக்க காவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 24–11–2021 ஆம் தேதியிட்ட அரசாணையின்படி, 800 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

1–12–2021 முதல் காவலர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்கும் மருத்துவ பரிசோதனை, பெண்களுக்கான சிறப்புப் பரிசோதனை ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11–30

24–1–2022 முதல் காவல் நிலையங்களில் உடனடி மற்றும் அவசரச் செலவுகளை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ரொக்க சில்லறை செலவின நிதி (Cash Contingency Fund) உயர்த்தி வழங்கப்பட்டது. 4–3–2022 அன்று புதிதாக ஆறு மாவட்டங்களில் காவலர் அங்காடிகள் நிறுவ உத்தரவிடப்பட்டது. 1–8–2022 ஆம் நாளிட்ட அரசாணைமூலம் மெரினா கடற்கரையில் பொது மக்கள் நீரில் மூழ்குவதைத் தடுக்க "மெரினா கடற்கரை உயிர் காப்பு பிரிவு" அமைக்கப்பட்டது. இப்படி அறிவிப்புகளை ஆணையாக உடனுக்குடன் பிறப்பித்துள்ளதன் காரணத்தால்தான் இவைகளையெல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். அதிலும் குறிப்பாக பெண் காவலர் நலனுக்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. போலீஸ் போன்ற அதிகாரமிக்க பணிகளில் பெண்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதற்கு செயல்வடிவம் கொடுத்தவர், முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஜூன் 3 ஆம் நாள், 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடங்கவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நூற்றாண்டு தொடங்கும் ஆண்டிலேயே, அவர் முன்னெடுத்த முக்கிய திட்டமான, தமிழ்நாடு காவல் துறையில் மகளிர் காவலர்கள் இணைந்ததன் 50 ஆவது ஆண்டு நிறைவு

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

பெறுகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் முயற்சியால்தான் இன்று ஏராளமான பெண்களின் காவல் துறை கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதிக பெண் காவலர்களைக் கொண்ட முதல் ஐந்து மாநிலக் காவல் துறைகளில் தமிழ்நாடு காவல் துறையும் இன்றைக்கு இடம் பெற்றிருக்கிறது. தற்போது, எனது பாதுகாப்புக்கான உள்வட்ட பாதுகாப்புப் பிரிவிலேயே ஒரு பெண் உதவி ஆய்வாளர் மற்றும் எட்டு பெண் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு காவல் துறையில் மகளிர் காவலர்கள் இணைந்ததன் 50 ஆம் ஆண்டு பொன்விழாவைத்தான் 17–3–2023 அன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கிலே சிறப்பாகக் கொண்டாடினோம். அந்த நிகழ்ச்சியிலே சிறப்பு அஞ்சல் உறையினை வெளியிட்டோம். பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'அவள்' திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தேன். அந்த விழாவில் பெண் காவலர்களுக்கான சிறப்பு வாய்ந்த நவரத்தின திட்டங்களை அறிவித்தேன். ரோல்கால் என்ற காவல் வருகை அணிவகுப்பிற்கான நேரம் காலை 7 மணி என்பதைத் தளர்த்தி 8 மணியென மாற்றியமைக்கப்படும். சென்னை மற்றும் மதுரையில் பெண் காவலர்கள் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து காவல் நிலையங்களிலும் பெண் காவலர்களுக்குக் கழிப்பறைகளுடன் தனி ஓய்வு அறை கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தேவையான அனைத்து இடங்களிலும் காவல் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் காவல் பணி விருதும், கோப்பையும் ஆண்டுதோறும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் காவலர்கள் குடும்பச் சூழ்நிலைக்கு ஏற்ப விடுப்பு மற்றும் பணியிட மாறுதல் வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் காவலர்களுக்கு துப்பாக்கி சுடும் போட்டி ஆண்டுதோறும் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் காவலர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 'காவல் துறையில் பெண்கள்' என்ற தேசிய மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் காவலர்களின் நலனுக்காக பணி ஆலோசனை வழிகாட்டுதல் குழு அமைக்கப்படும் என்பன அந்த 9 அறிவிப்புகள். இவற்றை விரைந்து நிறைவேற்றவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

தமிழ்நாட்டில் பெண்ணியத்தையும், பெண் உரிமையையும், பெண் பாதுகாப்பையும் உறுதிசெய்யக்கூடிய வகையில், காவல் துறையில் பெண் காவலர்கள் முதல் பெண் அதிகாரிகள் வரை அனைவரின் தேவைகளைப் பூர்த்தி செய்வது, அவர்களது நலனை மேம்படுத்த வேண்டியது அவசியம். இதனை உணர்ந்தே தி.மு.க. அரசு பெண் காவலர்களுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இரண்டாம் நிலைக் காவலர், சிறைக் காவலர், தீயணைப்பாளர் பணியிடங்களுக்கு 11 ஆயிரத்து 812 நபர்கள் 2021 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று, 2022 ஆம் ஆண்டு, 3 ஆயிரத்து 552 காலிப் பணியிடங்களுக்கு, காவலர்களை நியமித்திட தேர்வு நடத்தப்பட்டு, 29-3-2023 அன்று தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. சார்பு ஆய்வாளர் பணியிடத்திற்கு 2022 இல் தேர்வு நடத்தப்பட்டு, 438 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

முற்பகல் 11-35

மேலும், ஆயுதப் படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மற்றும் தாலுகா உள்ளிட்ட பிரிவுகளுக்கு, 615 சார்பு ஆய்வாளர்களை தேர்வு செய்வதற்காகவும், ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 2 ஆயிரத்து 599 பணியிடங்களை நிரப்புவதற்கும், 106 சார்பு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்களை நிரப்புவதற்கும், 63 சார்பு ஆய்வாளர் (விரல் ரேகை) பணியிடங்களை நிரப்புவதற்கும் உரிய அறிவிக்கைகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

காவல் துணைக் கண்காணிப்பாளர்களைப் பொறுத்தவரையில், அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு, கடந்த 2021-2022 ஆம் ஆண்டிற்கான 91 நபர்களை உள்ளடக்கிய தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டு, பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், காவல் துணைக் கண்காணிப்பாளருக்கான காலிப்பணியிடம் 47 என நிர்ணயிக்கப்பட்டு, தேர்ந்தோர் பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டு காவல் துறையின் மானியக் கோரிக்கையின்போது, காவலர்கள் மீதான சிறு தண்டனைகள் கைவிடப்பட்டு, அவர்களுக்கு உரிய பதவி உயர்வு மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டோம். அந்த அறிவிப்பிற்கிணங்க, கடந்த 7–12–2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் 2,249 சிறு தண்டனைகள் அரசால் இரத்து செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், "உங்கள் துறையில் முதலமைச்சர்" என்ற திட்டத்தின்கீழ், மொத்தம் 3,329 மனுக்கள் காவலர்களிடமிருந்து, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களால் 1–7–2021 முதல் 31–3–2023 வரை பெறப்பட்டு, அவற்றுள் 2,930 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தண்டனைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. அதோடுமட்டுமல்லாமல், நான் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தை, 22–9–2022 அன்று ஆய்வு செய்தபோது, சிறு தண்டனைகளை இரத்து செய்யக் கோரி, காவலர்கள் என்னிடம் மனுக்களை அளித்தனர்.

அவற்றில், மொத்தம் 336 மனுக்கள் "உங்கள் துறையில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது அவை அரசின் நடவடிக்கையில் உள்ளன. எனவே, காவலர்கள் மீதான சிறு தண்டனையைப் பொறுத்தவரையில், மொத்தம் பெறப்பட்ட 5,922 மனுக்களில், 5,179 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, காவலர்கள் மீதான தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் தடய அறிவியல் துறையின் பங்கு இன்றியமையாதது. நமது ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 15 தடயவியல் ஆய்வுப் பிரிவுகள் கொண்ட சென்னை தலைமை ஆய்வகம் 13–5–2022 அன்று இந்திய தரச் சான்று நிறுவனத்தின் சான்றிதழை பெற்றுள்ளது.

2022 துவக்கத்தில் 19 ஆயிரத்து 347 வழக்குகள் ஆய்வுக்காக நிலுவையில் இருந்தன. 2022–ல் பெறப்பட்ட 81 ஆயிரத்து 328 வழக்குகளையும் சேர்த்து, மொத்தம் 1 இலட்சத்து 675 வழக்குகள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

இவற்றில் 31-12-2022 வரை 91 ஆயிரத்து 506 வழக்குகளில், தடய அறிவியல் துறை ஆய்வு அறிக்கை வழங்கியிருக்கிறது.

தடய அறிவியல் துறை வரலாற்றில் முதல் முறையாக கழக ஆட்சியில்தான் 91 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வு அறிக்கைகள் அளிக்கப்பட்டு, இப்படியொரு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதை மேலும் வலுப்படுத்தும் வகையில், கோவையில் புதிய மரபணு ஆய்வுப் பிரிவு, மதுரை அறிவியல் ஆய்வகத்திற்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் அதிநவீன மரபியல் ஆய்வுக் கருவி, போதைப் பொருட்களை துல்லியமாகக் கண்டறிய 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் LC-MS எனும் அதிநவீன கருவி வாங்க ஒப்புதல், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், போக்சோ குற்றங்களின் விசாரணை, போதைப் பொருள் ஒழிப்பிற்குத் தேவையான விரைவான ஆய்வு என அனைத்திற்கும் முன்னுரிமை அளித்து, இத்துறை இந்த அரசில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தன்னலமற்று உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றும் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறது. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளில் உடனடியாகத் தலையிட்டு, 2022 ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 275 மனித உயிர்களையும், 249 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உடைமைகளையும் காப்பாற்றியிருக்கிறது.

தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பாக இருந்தால்தான், மக்களைப் பாதுகாக்க முடியும். அதனால், 1,350 தீ பாதுகாப்பு உடைகள், 450 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன்கூடிய 3,000 மீட்பு உடைகள் 49 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில் வாங்கி, வழங்கப்பட்டுள்ளன.

முற்பகல் 11-40

பொதுமக்களின் சிறப்பான சேவைக்கு தீயணைப்பு நிலையங்கள் மிக, மிக முக்கியம். ஆகவே, 62 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாநிலம் முழுவதும் 17 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

தீயணைப்பு நிலையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. ட்ரோன்கள், புதிய நீர்த்தாங்கி வண்டிகள், அவசரகால சிறிய மீட்பு ஊர்திகள், வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்தி, உயரழுத்த நீர்த் தாங்கி வண்டி உள்ளிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிக்குத் தேவையான பல்வேறு வாகனங்களுக்கு 24 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

செங்குன்றம், போடிநாயக்கனூர், துறையூர், ராணிப்பேட்டை, சிவகாசி, பெரும்பாக்கம் உள்ளிட்ட 6 இடங்களில் தீயணைப்பு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 40 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் 172 குடியிருப்புகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறை பணியாளர்களின் நலனுக்காக இவ்வாறு பல்வேறு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு உரையாற்றும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை, அதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்கள். இதனைப் பொறுத்தவரையில், மானியக் கோரிக்கை எண் 25, இயக்கூர்திகள் சட்டங்கள்–நிருவாகம் குறித்த உள்துறை போக்குவரத்து (Home Transport) கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 56-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாலைப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், எங்களது அரசு பல சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. சாலைப் பாதுகாப்பு தொடர்பாக அரசுக்கு அவ்வப்போது உரிய ஆலோசனைகளை வழங்கிட, மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு முயற்சிகளைத் திறம்பட செயல்படுத்திட 'இன்னுயிர் காப்போம் திட்டம்' எங்களது அரசால் வகுக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் 19-4-2023 வரை விபத்துக்குள்ளான 1,56,000 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் 138 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

2019-ல் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18,129 ஆக இருந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கையால் 2022-ல் 17,884 ஆக குறைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் 2023-2024 ஆம் ஆண்டிற்கு 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சி உச்ச நீதிமன்றத்துக்கும், ஒன்றிய அரசுக்கும் விபத்து எண்ணிக்கையைக் குறைத்து, தவறான தகவல் அளித்ததுபோல் இல்லாமல், விபத்து குறித்த உண்மைத் தகவல்களைக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் வெளியிட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், பொள்ளாச்சியில் காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் தயார் நிலையில் இருப்பதாகவும், அதனை உடனே கட்டித் தரவேண்டுமென்றும் ஒரு கோரிக்கை வைத்திருந்தார். அவரது கோரிக்கையைப் பொறுத்தவரையில், பொள்ளாச்சி வட்டம், ப்ளாக் எண் 26, வார்டு எண் D, பொள்ளாச்சி நகரத்தில் சர்வே எண்கள் 1592, 1594, 1597, 1599 காவல் துறைக்குச் சொந்தமான இடத்தில், 8 ஆய்வாளர் குடியிருப்புகளும், 20 உதவி ஆய்வாளர் குடியிருப்புகளும் மற்றும் 204 தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டுவதற்குத் திட்டமிட்டு, அதற்கான மதிப்பீடு 104 கோடி ரூபாய்க்கு தயார் செய்யப்பட்டு, தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையின் மானியக் கோரிக்கையில் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், திரு. தி. வேல்முருகன் அவர்கள், திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள், திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் உள்ளிட்டோர் "1996 ஆம் ஆண்டு நேரடி உதவி ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்ட 1,100 காவல் உதவி ஆய்வாளர்கள், காவல் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற பின்னர், அவர்களில் 241 பேர் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு பெறாமல் உள்ளனர் என்றும், அவர்களுக்குக் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குரிய பயிற்சி வழங்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்படாமல் உள்ளதாகவும், இதுகுறித்து நடவடிக்கை

எடுக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தார்கள். பொதுவாக காவல் துறையில் குறிப்பிட்ட பதவிகளுக்கு காலிப் பணியிடங்கள் உருவாகும்போது அதற்கேற்றவாறு அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. ஆகவே, காலிப் பணியிடங்கள் உருவாக, உருவாக நிச்சயம் காலதாமதம் இன்றி பதவி உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சென்னை மாநகர காவல் எல்லைக்குள் இரண்டரை இலட்சம் கண்காணிப்புக் கேமராக்கள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்டதாகக் கூறினார். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் உள்துறையிலிருந்து கடந்த 12–11–2020 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 1348-ன்படி, அரசு நிதி மற்றும் தனியார் ஒத்துழைப்பில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கேமராக்கள் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 282 மட்டுமே குறிப்பிடப்பட்டு, அவற்றின் பராமரிப்பிற்காக 50 இலட்சம் ரூபாய் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இரண்டரை இலட்சம் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படவில்லை என்பதே உண்மை!

அதுமட்டுமல்ல, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சென்னை மாநகர காவல் துறை லிமிட்டில் நடத்தப்பட்ட ஆய்வில், வெறும் 60 ஆயிரத்து 997 கண்காணிப்புக் கேமராக்கள் மட்டுமே இருந்தன. அவற்றிலும் அரசு செலவில் நிறுவப்பட்டவை வெறும் 2 ஆயிரத்து 853 மட்டுமே! மற்றவை தனியார் நன்கொடை மூலமும், தனியார் இடத்தில் அவர்களாலும் பொருத்தப்பட்டவை என்பதும் கண்டறியப்பட்டது.

சில இடங்களில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியையும் பயன்படுத்தி அந்தக் கேமராவை பொருத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், 22 ஆயிரத்து 229 கேமராக்கள் இரண்டரை கோடி ரூபாய் செலவில் "வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம்" செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது; புதிய கண்காணிப்புக் கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தனை செல்வன் அவர்கள் சமூக நீதி கருத்துகளை உள்ளடக்கி, பயிற்சி பெறும் காவலர்களுக்கு பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமென கோரிக்கை வைத்திருந்தார். இதனைப் பொறுத்தவரையில், இணையவழிக் குற்றங்கள் (Cyber Crime), சமூக ஊடகங்களைக் கொண்டு, தவறான செய்திகளைப் பரப்புவோர்மீது உரிய நடவடிக்கை எடுப்பது மற்றும் மனித உரிமை குறித்தான வளர்ச்சி, நவீன தொழில்நுட்பங்கள் போன்ற முக்கிய அம்சங்கள் இப்புதிய பாடத் திட்டத்தில் இடம்பெறும். அதற்கான கோப்பில் இரண்டு தினங்களுக்கு முன்புதான் நான் கையொப்பமிட்டேன். இதற்கான ஆணைகள் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் தெரிவு செய்யப்படும் நேரடி உதவி ஆய்வாளர்கள், மாற்றியமைக்கப்பட்ட பயிற்சி பாடத் திட்டம் மற்றும் நடத்தை விதிகளின்படி பயிற்சிகளைப் பெறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசும்போது இஸ்லாமிய சிறைக்கைதிகளின் முன்விடுதலை பற்றி குறிப்பிட்டார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 113-வது பிறந்த நாளை முன்னிட்டு சிறையில் நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்துவரும் ஆயுள் தண்டனை கைதிகளின் தண்டனை பற்றியும் குறிப்பிட்டார்கள். நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் தண்டனையைக் குறைத்து முன்விடுதலை செய்வது குறித்து, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உரிய விரிவான வழிமுறைகளை வகுத்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சிறைகளில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும் இதன்கீழ் பயன்பெற முடியாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் இருக்கக்கூடிய உடல் நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் மற்றும் மாற்றுத் திறனாளி சிறைவாசிகள் ஆகியோரின் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில்கொண்டு இதுகுறித்தான மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் இதுதொடர்பாக தற்போது நடைமுறையில்

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

உள்ள சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் இவர்களின் நிகழ்வுகளை ஆராய்ந்து, அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாக, மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின்கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஆகவே, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு பொறுப்பேற்றவுடன் செயல்பட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. என். ஆதிநாதன் அவர்களின் தலைமையிலான குழு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது. முன்விடுதலையின் அடுத்த கட்டமாக, அந்தப் பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் செயலாளர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்ளிட்டோர் பரிசீலித்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர், எந்தவிதக் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள். மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை சிறப்பாகப் பராமரித்து, குற்றங்களில் ஈடுபடுவோர் யாராயினும் அவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அதனால், புதிய முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டைத் தேடி வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில் பெருகி, நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, மாநிலத்தின் வளர்ச்சியில் தமிழ்நாடு காவல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை அதுவும் குறிப்பாக, 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாடு காவல் துறை "ஸ்காட்லாண்ட் யார்டு" காவல் துறைக்கு இணையாகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய சுதந்திரத்தை காவல் துறைக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு காவல் துறை நிகழ்த்திய சாதனைகளுடன் திருப்தி அடையக்கூடியவன் அல்ல நான்.

அகில இந்திய அளவில் தமிழ்நாடு காவல் துறை இப்போது பிடித்துள்ள முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைக்க வேண்டும் என்பதே, இந்த அரசினுடைய இலக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுக்கும். தமிழ்நாடு காவல்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

துறையின் கடினமான பணியை, நம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

அவரவர் தொகுதியில், சட்டம்-ஒழுங்குப் பணியில் நியாயமாக, நேர்மையாக நடக்கும் காவலர்களை, காவல் துறை அதிகாரிகளை நீங்களும் மனதாரப் பாராட்டி, அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு காவல் துறை, இந்தியாவில் முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் அளவிற்கு உதவிட வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையும், காவல் துறையினர் நம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் இணைந்து, நமது 'திராவிட மாடல்' ஆட்சியில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் நிச்சயம் கொண்டு செல்லும் என இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் 20 ஆம் தேதியன்று தொடங்கிய இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. இந்த 21 அலுவல் நாட்களும் இந்த அவை ஆக்கபூர்வமாகச் செயல்பட்டது. மக்களாட்சிக்கு மதிப்பளிக்கும் விதமாக, அவை நடவடிக்கைகளில் ஈடுபட்ட அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கூட்டத் தொடரிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே அதிக நேரம் பேச வாய்ப்பு தரப்பட்டதாக நான் கருதுகிறேன். அந்த வகையில், இந்த அரசுக்குப் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறு கட்சிகளின் சட்டமன்றக் குழுத் தலைவர்கள் என அனைவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் விதத்தில், இந்த மாமன்றத்தை வழிநடத்திய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரான தங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுவதற்குமுன், சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

அறிவிப்புகள்

காவல் துறை

பெருகி வரும் மக்கள்தொகைக்கு ஏற்பவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும், விழுப்புரம் மாவட்டம்–மேல்மலையனூர், கரூர் மாவட்டம்–நங்கவரம், காஞ்சிபுரம் மாவட்டம்–பொன்னேரிக்கரை, வேலூர் மாவட்டம்–பிரம்மபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா ஆகிய ஐந்து இடங்களில் புதிய தாலுகா காவல் நிலையங்களும், சென்னை பெருநகரக் காவல் பகுதியில் வானகரம், தாம்பரம் காவல் ஆணையரகப் பகுதியில் மேடவாக்கம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகப் பகுதியில் புதூர் ஆகிய இடங்களில் 3 புதிய பெருநகர காவல் நிலையங்களும் அமைக்கப்படும்.

1. ஐந்து புதிய தாலுகா காவல் நிலையங்கள் அமைக்கப்படும் (அறிவிப்பு எண் 27)

பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்பவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும் விழுப்புரம் மாவட்டம்–மேல்மலையனூர், கரூர் மாவட்டம்–நங்கவரம், காஞ்சிபுரம் மாவட்டம்–பொன்னேரிக்கரை, வேலூர் மாவட்டம்–பிரம்மபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா ஆகிய ஐந்து இடங்களில் மிதவகை காவல் நிலையங்கள் தேவையான பணியாளர்களுடன் தலா ரூபாய் 2.58 கோடி என மொத்தம் ரூபாய் 12.91 கோடி செலவில் அமைக்கப்படும்.

2. மூன்று புதிய பெருநகர காவல் நிலையங்கள் அமைக்கப்படும் (அறிவிப்பு எண் 28)

மாநகரங்களில் பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்பவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும், சென்னை பெருநகர காவல் பகுதியில் வானகரம், தாம்பரம் காவல் ஆணையரகப் பகுதியில் மேடவாக்கம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகப் பகுதியில் புதூர் ஆகிய இடங்களில் தலா ரூபாய் 8.35 கோடி என மொத்தம் ரூபாய் 25.44 கோடி செலவில் 3 புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

தாம்பரம் மாநகருக்குட்பட்ட பெரும்பாக்கம், ஓட்டேரி, தஞ்சாவூர் மாவட்டம், சோழபுரம், நாச்சியார்கோவில், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, தென்காசி மாவட்டம், புளியரை மற்றும் வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஆகிய காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தாம்பரம் மாநகரம், பெரும்பாக்கம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 39)

தற்போது தாம்பரம் மாநகரம்–டி–17 பெரும்பாக்கம் காவல் நிலையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கென சொந்தமான நிலம் உள்ளது. அவ்விடத்தில் ரூ.185.63 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

4. தாம்பரம் மாநகரம், ஓட்டேரி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 40)

தாம்பரம் மாநகரம், டி7 ஓட்டேரி காவல் நிலையத்திற்கென காவல் துறைக்குச் சொந்தமான நிலம் உள்ளது. அவ்விடத்தில் இக்காவல் நிலையத்திற்கு ரூபாய் 215 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

5. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சோழபுரம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 38)

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சோழபுரம் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், ரூபாய் 185.63 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

6. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாச்சியார்கோவில் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 37)

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாச்சியார்கோவில் காவல் நிலையம் 1985 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் ஒன்று ரூபாய் 265.96 இலட்சம் செலவில் கட்டப்படும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

7. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 36)

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி காவல் நிலையத்திற்கான கட்டடம் 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் ஒன்று ரூபாய் 212.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

8. தென்காசி மாவட்டத்திலுள்ள புளியரை காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 35)

தென்காசி மாவட்டத்திலுள்ள புளியரை காவல் நிலையத்திற்கான கட்டடம் 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் ஒன்று ரூபாய் 161.59 இலட்சம் செலவில் கட்டப்படும்.

பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பிற்காக சென்னை மாநகரில் 2 ஆயிரம் சிசிடிவி கேமராக்கள், 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

9. சென்னை மாநகரில் 2,000 சிசிடிவி கேமராக்கள் நிறுவப்படும் (அறிவிப்பு எண் 3)

பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக சிசிடிவி கேமராக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் சென்னை நகரில் 2,000 சிசிடிவி கேமராக்கள் ரூபாய் 550.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

பெண் காவலர்கள் 200 பேர் தங்கும் "மகளிர் காவலர் விடுதி" சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் ரூபாய் 1 கோடியே 47 இலட்சம் செலவில் கட்டப்படும்.

10. சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி ஏற்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 71)

தமிழக காவல் துறையில் மகளிரின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு ஏற்கெனவே அறிவித்தபடி, சிந்தாதிரிப்பேட்டையில்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி ரூபாய் 1,047 இலட்சம் செலவில் கட்டப்படும். இவ்வசதி, பெண் காவலர்கள் சென்னை மாநகருக்கு பணியிட மாறுதல் பெற்று வரும்போதெல்லாம், அவர்களுக்கு அரசு குடியிருப்புகள் கிடைக்கும் வரை அல்லது சொந்தமாக வாடகைக்கு தங்கும் விடுதியை ஏற்பாடு செய்யும் வரை தங்கும் இடமாக பயன்படுத்தப்படும்.

10 கோடி ரூபாய் செலவில் 250 காவல் நிலையங்களில் பொது மக்களுக்குக் குடிநீர் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

11. காவலர் மற்றும் பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்தும் விதமாக காவல் நிலையங்களில் சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 18)

காவல் நிலையங்களை அணுகும் பொதுமக்களின் வசதிக்காக, முதற்கட்டமாக 250 காவல் நிலையங்களுக்கு தலா ரூபாய் 4 இலட்சம் செலவில் வரவேற்பறை, பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் காத்திருப்பு கொட்டகைகள் ஆகியவை மொத்தம் ரூபாய் 10 கோடி செலவில் கட்டப்படும்.

முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் வசதிக்காக 38 காவல் துறை கட்டடங்களில் மின்தூக்கிகள் (Lift) 8 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் வைக்கப்படும்.

12. முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக காவல் துறை கட்டடங்களுக்கு மின்தூக்கி வசதிகள் (Lift) அமைக்கப்படும் (அறிவிப்பு எண் 21)

காவல் துறை அலுவலகங்களை அணுகும் முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் காவல் துறையில் உள்ள 38 கட்டடங்களில், மின்தூக்கி வசதிகள் ரூபாய் 844 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் காவலர்களுக்கு வழங்கும் சீருடை துணிக்குப் பதில் பணமாக வழங்கிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அது ஏற்கப்படுகிறது. இனி காவலர்களுக்கு சீருடைப் படியாக

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

4,500 ரூபாய் ஆண்டுதோறும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

13. காவலர்களுக்கு சீருடை மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்து வழங்குவதற்குப் பதிலாக சீருடைப் படி (Uniform Allowance) ரூ.4,500/– வழங்கப்படும் (அறிவிப்பு எண் 59)

தற்போது காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு வருடந்தோறும் சீருடைக்கான துணி சிறைத் துறையிடமிருந்தும், இதர பொருட்கள் காவல் தலைமையகத்திலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதற்குப் பதிலாக ரூபாய் 45 கோடி செலவில் இப்பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.4,500/–சீருடைப் படியாக வழங்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள் பேசும்போது ஒரு கோரிக்கை வைத்திருந்தார். அதனடிப்படையில், காவலர் முதல் தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு எரிபொருள் படி 370 ரூபாயிலிருந்து 515 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14. காவலர் முதல் தலைமைக் காவலர்/சிறப்பு உதவி ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு எரிபொருள் படி (Fuel Allowance) உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 60)

காவலர், தலைமைக் காவலர்/சிறப்புக் காவல் உதவி ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு தற்போது எரிபொருள் படியாக 5 லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.370/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. எரிபொருள் விலை உயர்வினை கருத்தில்கொண்டு இப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.515/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

முற்பகல் 11–55

ஐந்தாவது காவல் ஆணைய பரிந்துரைப்படி, அனைத்துக் காவல் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு 5 வருடத்திற்கு ஒரு முறை ஒரு வார காலத்திற்கு பணியிடைப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

15. 5–வது காவல் ஆணைய பரிந்துரையின்படி, அனைத்து காவல் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு 5 வருடத்திற்கு ஒருமுறை ஒரு வார காலத்திற்கு பணியிடைப் பயிற்சி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 62)

5-வது காவல் ஆணைய பரிந்துரையின்படி, அனைத்து காவல் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு 5 வருடத்திற்கு ஒருமுறை ஒரு வார காலத்திற்கு பணியிடைப் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி இப்பணியாளர்களின் தரத்தினை மேம்படுத்திட உதவும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள் ஆகியோரின் கோரிக்கையினை ஏற்று, சென்னை மாநகர காவலர்களுக்கு உள்ளதுபோல, ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவலர்களுக்கும் நாளொன்றுக்கு உணவுப்படி 300 ரூபாய் வழங்கப்படும்.

16. ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.300/– வீதம் உணவுப்படி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 61)

சென்னை மாநகர காவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவலர்களுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 300 வீதம் மாதந்தோறும் அதிகபட்சம் 26 நாட்களுக்கு, உணவுப்படி வழங்கப்படும்.

இதற்கான மொத்த செலவினம் – ஆவடி ரூ.10.21 கோடி மற்றும் தாம்பரம் ரூ.10.49 கோடி ஆகும்.

காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி உதவித் தொகை 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். ஆண்டொன்றுக்கு பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கை 100-லிருந்து 200 ஆக உயர்த்தப்படும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

17. காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி உதவித் தொகை மற்றும் பரிசுகள் வழங்குதல் (அறிவிப்பு எண் 66)

(அ) சிறப்புக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை 100-லிருந்து 200 அதிகரித்தல்

(ஆ) கல்வி பரிசுகள் வழங்கும் திட்ட நிதியை இரட்டிப்பாக்குதல்

காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்மூலம் தற்போது 100 மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 4 வருடங்களுக்கு வழங்கப்படுவது. எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, 200 மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும். இது தவிர, கல்விப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் பரிசுத் தொகை இரட்டிப்பாக்கப்படும். இதற்கு கூடுதலாக தேவைப்படும் செலவினம் ரூபாய் 176.58 இலட்சம் ஆகும்.

கோவை, இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

18. கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்படும் (அறிவிப்பு எண் 75)

போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு புலனாய்வாளர்களுக்கு போதைப் பொருட்களை ஆய்வு மேற்கொண்டு அதன் வகையை கண்டறியவும் அது தொடர்பான தடயவியல் ஆய்வறிக்கைகளை விரைந்து வழங்கிடவும், கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் புதியதாக போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் ரூபாய் 3.74 கோடி செலவில் அமைக்கப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

19. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை (Insurance Risk Coverage) உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 97)

காவல் துறைப் பணியாளர்களுக்கு காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதற்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கான காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை (Insurance Risk Coverage) கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்:

பதவி	தற்போதைய வரம்பு (ரூ.)	உயர்த்தப்படும் வரம்பு (ரூ.)
தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் வரை	2 இலட்சம்	4 இலட்சம்
மாவட்ட அலுவலர், துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் வரை	4 இலட்சம்	8 இலட்சம்
கூடுதல் இயக்குநர்	--	10 இலட்சம்
தலைமை இயக்குநர்	10 இலட்சம்	20 இலட்சம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஓரகடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஆகிய நான்கு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

I. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நிறுவுதல்

20. நான்கு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நிறுவப்படும் (அறிவிப்பு எண் 81)

காஞ்சிபுரம் மாவட்டம்-ஓரகடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்-திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம்-ராதாபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம்-ரிஷிவந்தியம் ஆகிய நான்கு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் தலா ரூபாய் 181.32 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் 725.28 இலட்சம் செலவினத்தில் நிறுவப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 26 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 36 நீர்த்தாங்கி வண்டிகள், பெருந்தீ விபத்துகளின்போது பயன்படுத்த 18 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 27 பெரும் தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்யப்படும்.

21. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 35 நீர்த்தாங்கி வண்டிகள் (Water Tenders) கொள்முதல் செய்யப்படும் (அறிவிப்பு எண் 83)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான அடிப்படை அலகாகக் கருதப்படுவது, நீர்த்தாங்கி வண்டிகளாகும். இவற்றின் தேவையைக் கருத்திற்கொண்டு, 35 நீர்த்தாங்கி வண்டிகள் (Water Tenders) தலா ரூபாய் 75.00 இலட்சம் என்ற அளவில் மொத்தம் ரூபாய் 26.25 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

22. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 27 பெரும தண்ணீர் லாரிகள் (Water Bowzers) கொள்முதல் செய்யப்படும் (அறிவிப்பு எண் 84)

பெருந்தீ விபத்துகளின்போது தேவைப்படும் அதிக அளவிலான தண்ணீர் தேவையினை கருத்தில்கொண்டு, 27 பெரும தண்ணீர் லாரிகள் (Water Bowzers) தலா ரூபாய் 70.00 இலட்சம் என்ற அளவில் மொத்தம் ரூபாய் 18.90 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

விழுப்புரம், இராமநாதபுரம், சேலம், திருநெல்வேலி ஆகிய நான்கு வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் 7 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் பன்னாட்டுத் தரத்திற்கு மேம்படுத்தப்படும்.

23. விழுப்புரம், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் ISO/IEC 17025: 2017 சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 79)

சென்னை தலைமை ஆய்வகம் ISO/IEC 17025: 2017 சர்வதேச தரச் சான்றிதழை 13-5-2022 அன்று பெற்றுள்ளது. இரண்டாவது கட்டமாக மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் தற்போது அத்தரச் சான்றிதழை விரைவில் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது மூன்றாம் கட்டமாக விழுப்புரம், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களை ISO/IEC/17025:2017 இன்படி சர்வதேச தரத்திற்கு ரூபாய் 745 இலட்சம் (தொடர் செலவினம் ரூபாய் 20 இலட்சம், தொடராச் செலவினம் ரூபாய் 725 இலட்சம்) செலவில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 101 அறிவிப்புகளில் நான் இப்போது படித்தது தவிர, மீதமுள்ள அறிவிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

I. புதிய உபகரணங்கள் வாங்குதல்

24. நடுத்தர வகை காவல் நிலையங்கள்/பிரிவுகளுக்காக பல்வகை கையடக்க கணினி (Multi Function Tablets) வழங்கப்படும் (அறிவிப்பு எண் 1)

ஸ்மார்ட் காவலர் (இ-பீட்), பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் பணியாளர் பட்டியல் படிவம் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்த நடுத்தர, இலகு மற்றும் புதிய காவல் நிலையங்கள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதியப்படும் அலகுகளுக்குக் கூடுதலாக தேவைப்படும் பல்வகை கையடக்க கருவிகள் வழங்கப்படும்.

தற்போது, 332 நடுத்தர காவல் நிலையங்களுக்கு, ஒரு காவல் நிலையத்திற்கு 3 என்ற எண்ணிக்கையில் 996 பல்வகை கையடக்க கருவிகள் ரூபாய் 438.24 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

25. சென்னை பெருநகர காவல் துறையிலுள்ள பாதுகாப்பு பிரிவுக்கு வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் புதிய கருவிகள் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 2)

அதிமுக்கிய நபர்கள்/முக்கிய நபர்கள்/பாதுகாக்கப்பட வேண்டிய நபர்களின் பாதுகாப்பிற்காக நாச வேலைகளைத் தடுக்கவும், எளிதில் அணுகுவதை கட்டுப்படுத்தவும், கழிவு செய்யப்பட்ட வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் கருவிகள் ரூபாய் 274.13 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

26. ஒருங்கிணைந்த வாகன சோதனை மையங்களில் சென்னை மாநகர காவல் துறைக்காக நவீன உபகரணங்கள் வாங்கப்படும் (foldable and moveable barricades with ANPR cameras and image enhancing software) (அறிவிப்பு எண் 4)

*திருட்டு, வழிப்பறி, செயின்பறிப்பு உள்ளிட்ட இதர சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளை கையாள ஒருங்கிணைந்த வாகன சோதனை மையங்களில் சென்னை பெருநகர காவல் துறைக்காக தானியங்கி வாகன எண் பதிவு செய்யும் கேமராக்கள் கொண்ட மடிக்க மற்றும் நகர்த்தக்கூடிய தடுப்புகள் (*foldable and moveable barricades with ANPR cameras and image enhancing software*), மற்றும் உருவத்தை மிகத் தெளிவாகக் காட்டக்கூடிய மென்பொருள்மூலம் கேமராவில் பதிவானதை பகுப்பாய்வு செய்து அதன்மூலம் தெளிவற்ற படங்களின் உருவங்களைக் கண்டுபிடித்து வீடியோ பதிவுகள்மூலம் வழக்குகளை கண்டுபிடிக்க உதவியாக இருக்கும். இதற்காக, ரூபாய் 214.30 இலட்சம் செலவின் நவீன உபகரணங்கள் வாங்கப்படும்.*

27. மூன்று வழித்தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு மண்டலம் (Traffic Regulation Observation Zone–TROZ) அமைத்தல் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கப்படும் (அறிவிப்பு எண் 5)

கடந்த நிதிநிலை அறிக்கையில் அண்ணாநகரில் மூன்று வழித்தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு மண்டலம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது தவறான பாதையில் வாகனம் ஓட்டுதலைக் கண்டுபிடிக்க மேலும் மூன்று வழித்தடங்களில் 300 தானியங்கி வாகன எண் பதிவு செய்யும் கேமராக்கள் நிறுவவும், மோட்டார் வாகன விதிமீறல்களுக்காக

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

வழக்குகளைப் பதிவு செய்ய 30 புதிய போக்குவரத்து சமிக்ஞைகளில் தானியங்கி வாகன எண் பதிவு செய்யும் கேமராக்கள் ரூபாய் 1,927.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

28. தமிழ்நாட்டிலுள்ள இந்திய காவல் பணி அல்லாத காவல் துணை கண்காணிப்பாளர் (தரம்–1) முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 6)

வளர்ந்துவரும் இணையவழி பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டும், பொதுமக்களின் குறைகளைத் தொடர்ந்து கண்காணித்திடவும் இந்திய காவல் பணி அல்லாத காவல் துணைக் கண்காணிப்பாளர் (தரம்–1) முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு 976 மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளன. அதில் முதற்கட்டமாக ரூபாய் 200 இலட்சம் செலவில் மடிக்கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும்.

29. நுண்ணறிவு பிரிவில் உள்ள காவல் ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 7)

வளர்ந்துவரும் இணையவழி பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டும், சட்டம்-ஒழுங்கு நிலவரத்தைக் கண்காணித்து நுண்தகவல்கள் வழங்கிட ஏதுவாக 247 மடிக்கணினிகள் நுண்ணறிவுப் பிரிவிலுள்ள காவல் ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு ரூபாய் 101 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

30. இணையதள குற்றப் பிரிவு தலைமையகத்திலுள்ள 1930 அழைப்பு மையம்/கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம் செய்யப்படும் (அறிவிப்பு எண் 8)

இணையதள குற்றங்கள் குறித்த அழைப்புகள் பெருகி வரும் நிலையில் ஏற்கெனவே உள்ள அழைப்பு மையம்/கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன்படி, இம்மையத்தில் உள்ள 8 இருக்கைகளை 15 இருக்கைகளாகவும், புதியதாக கூடுதல் பணியாளர்களை (மூன்றாண்டுகளுக்கு ரூபாய் 928.57 இலட்சம்) ஒப்பளிப்பு செய்யவும் முதற்கட்டமாக இந்தாண்டிற்கு ரூபாய் 310 இலட்சம் வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

31. ஒவ்வொரு காவல் பயிற்சி பள்ளிக்கும் (9) குறைந்தது 10 கணினிகள், அதற்குத் தேவையான பாகங்கள், அறைகலன்கள் மற்றும் ஒரு தொகுப்பு புலன் விசாரணை கருவி (Investigation Kit) வழங்கப்படும் (அறிவிப்பு எண் 9)

5-வது காவல் ஆணையத்தின் பரிந்துரையின்படி, குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைபின்னல் முறை (CCTNS) பற்றி பயனுள்ள பயிற்சி அளிக்கப்படுவதற்காக ஒவ்வொரு காவல் பயிற்சி பள்ளிக்கும் (9) குறைந்தது 10 கணினிகள், அதற்குத் தேவையான பாகங்கள், அறைகலன்கள் மற்றும் ஒரு தொகுப்பு புலன் விசாரணை கருவி (Investigation Kit) ஆகியவை ரூபாய் 80.10 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

32. சென்னை பெருநகர காவல் துறையில் அனைத்து காவல் நிலையங்களிலும் இதர அலுவலக கட்டடங்களிலும் தீயணைப்பு கருவிகள் (Fire Extinguishers) நிறுவப்படும் (அறிவிப்பு எண் 10)

காவல் நிலைய வளாகங்களிலும், இதர காவல் அலுவலக வளாகங்களிலும் தீ விபத்துகளைத் தடுத்தல், சொத்துகள் சேதம் போன்றவற்றைத் தடுக்க சென்னை பெருநகர காவல் துறையில் அனைத்து காவல் நிலையங்களிலும் இதர அலுவலக கட்டடங்களிலும் 270 தீயணைப்பு கருவிகள் ரூபாய் 49.95 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

33. சென்னை பெருநகர காவல் துறையில் மத்திய குற்றப் பிரிவில் புலனாய்வு அதிகாரிகளுக்காக மடிக்கணினிகள் வாங்கப்படும் (அறிவிப்பு எண் 11)

கள புலனாய்வுக்காகவும், சம்பவ இடங்களிலேயே சாட்சிகளைப் பதிவு செய்து பகுப்பாய்வு செய்யவும், வழக்குகளை விரைந்து தரமாக விசாரிக்கவும் சென்னை பெருநகர காவல் துறையில் மத்திய குற்றப் பிரிவில் புலனாய்வு அதிகாரிகளுக்காக 40 மடிக்கணினிகள் ரூபாய் 24 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

34. சென்னை பெருநகர காவலில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள 57 போக்குவரத்து சமிக்ஞைகள் மாற்றப்படும் (அறிவிப்பு எண் 12)

சென்னை பெருநகர காவல் துறையில் 287 சாலைப் போக்குவரத்து சமிக்ஞைகள் உள்ளன. அவற்றில், 57 சமிக்ஞைகள்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

10 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானதாகும். கடுமையான தட்பவெட்ப நிலைகளில் அவை நாள் முழுவதும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனவே, 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள 57 போக்குவரத்து சமிக்ஞைகள் ரூபாய் 427.50 இலட்சம் செலவில் மாற்றப்படும்.

35. குற்றவாளிகளை கைது செய்ய 25 ரிமோட்மூலம் விலங்கிடும் (Remote Restraint Wrap) கருவிகள் வாங்கப்படும் (அறிவிப்பு எண் 13)

குற்றவாளிகளைக் கைது செய்யும்போது குற்றவாளிகளால் காவலர்கள் தாக்கப்படும் சம்பவங்களைத் தடுக்க, ரிமோட்மூலம் விலங்கிடும் சாதனங்கள்மூலம் குற்றவாளிகளின்மீது பலத்தைப் பிரயோகிக்காமல் பாதுகாப்பாகவும், தற்காலிகமாகவும் சட்டரீதியாகவும் அவர்களைக் கட்டுப்படுத்தமுடியும். இதற்கென 25 ரிமோட்மூலம் விலங்கிடும் கருவிகள் ரூபாய் 75.07 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

36. சென்னை பெருநகர காவல் துறையில் துணை ஆணையாளர் மற்றும் அதற்கு மேல் நிலையிலுள்ள அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு மின்சார ஜெனரேட்டர் பொருத்தப்படும் (அறிவிப்பு எண் 14)

வெள்ளம் மற்றும் இயற்கைச் சீற்றங்களின்போது காவல் துறையினரிடையே தொலைத் தொடர்பு இன்றியமையாததாகும். அத்தகைய அவசரகாலங்களில் காவல் துறை அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்டும். எனவே, அவசரகால தயார்நிலை திட்டங்களுக்காக சென்னை பெருநகர காவல் துறையில் துணை ஆணையாளர் மற்றும் அதற்கு மேல் நிலையிலுள்ள அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு மின்சார ஜெனரேட்டர் ரூபாய் 68.28 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.

37. க்ரிப்டோ கரன்சி மோசடியைக் கண்டுபிடிக்க செயின் பகுப்பாய்வு ரீயாக்டர் (Chain Analysis Reactor Tool for Crypto Currency) கருவி வாங்கப்படும் (அறிவிப்பு எண் 15)

நாளுக்கு நாள் க்ரிப்டோ கரன்சி முதலீடு மோசடி பெருகி வரும் வேளையில் சட்ட அமலாக்கத்திற்கு க்ரிப்டோ கரன்சி புலனாய்வு அத்தியாவசியமாகும். தொடர் சங்கிலி சேவைகளை அறுத்து, க்ரிப்டோ கரன்சியின் மூலத்தையும், சேரும்

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

இடத்தையும் கண்டுபிடிக்க இக்கருவி பயன்படுவதால், இவற்றை வாங்க ரூபாய் 100 இலட்சம் ஒப்பளிக்கப்படும்.

38. குற்ற வழக்குகளை களநிலையில் புலனாய்வு செய்ய காவல் அதிகாரிகளுக்கு 450 பேப்லெட்டுகள் (Phablets) வாங்கப்படும் (அறிவிப்பு எண் 16)

சாட்சிகளின் கூற்றுகளை பதிவு செய்யவும், களநிலையில் வழக்குகளைப் புலனாய்வு செய்து சாட்சிகளைத் திரட்டவும், காவல் விசாரணைகளுக்கு இத்தகைய கையடக்க பேப்லெட்டுகள் சிறந்ததொரு கருவியாகும். நாளது தொலைநுட்பத்தின்மூலம் புலன் விசாரணை அதிகாரிகளின் புலனாய்வுத் திறனை மேம்படுத்த இத்தகைய கையடக்க பேப்லெட்டுகள் உதவிகரமாக இருப்பதால் அவை ரூபாய் 112.50 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

39. அதி உயர் அலை (VHF) மற்றும் டிஜிட்டல் நடமாடும் வானொலி (DMR) சாதனங்கள் வாங்கப்படும் (அறிவிப்பு எண் 17)

சென்னை பெருநகர காவல் துறைக்கு 112 VHF Static set, 459 VHF Mobile set, 857 VHF Handheld set ஆகிய சாதனங்கள் துணைப் பொருட்களுடன் ரூபாய் 736.00 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

II. காவலர் பொதுமக்கள் நல்லுறவு

40. சென்னை பெருநகரில் இணையதள குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு (Cyber Crime Awareness) ஏற்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 19)

பொதுமக்களிடையே இணையதள குற்றம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சென்னை பெருநகரில் குறும்படப் போட்டி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

41. சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த 3 துறை சார்ந்த வல்லுநர்கள் ஈடுபடுத்தப்படுவர் (அறிவிப்பு எண் 20)

சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கருத்துருக்கள் தயாரித்தல்/

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

தொழில்நுட்ப மதிப்பீட்டினை அளித்தல்/போக்குவரத்து சம்பந்தமான விதிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள 3 துறை சார்ந்த வல்லுநர்கள் ஒரு வருட காலத்திற்கு ஈடுபடுத்துவதற்கென ரூபாய் 36 இலட்சம் வழங்கப்படும்.

III. புதிய முயற்சிகள்

42. மாநில குற்ற ஆவண காப்பகத்தில் மென்பொருள் வல்லுநர்களின் துணையுடன் மென்பொருள் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் (Software Development and Management Centre) அமைத்தல் (அறிவிப்பு எண் 22)

சென்னையில் உள்ள மாநில குற்ற ஆவண காப்பகத்தில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்து கணினிமயமாக்கப்பட வேண்டிய செயலினங்களை அடையாளம் கண்டு அதற்கான செயலிகளை உருவாக்கி, பராமரிப்பது அவசியமாகிறது. இம்மையத்தில் தகவல் தொழில்நுட்பத் திறன் வாய்ந்த காவல் ஆளிநர்களும், மென்பொருள் வல்லுநர்களும் ஈடுபடுத்தப்படுவர். மேலும், இம்மையத்திற்கான உபகரணங்களும் வழங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூபாய் 60.89 இலட்சம் ஆகும்.

43. பெருநகர சென்னை காவல் துறையில் உள்ள நுண்ணறிவுப் பிரிவில் சமூக ஊடகப் பிரிவு (Social Media Cell) உருவாக்குதல் (அறிவிப்பு எண் 23)

பொதுமக்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும், சமூக ஊடக வெளியில் சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்து பகிரப்படும் தகவல்களை உடனுக்குடன் திரட்டி மேல்நடவடிக்கை எடுக்கவும் பெருநகர சென்னை காவல் துறையின் நுண்ணறிவுப் பிரிவில் சமூக ஊடகப் பிரிவு ஒன்று ரூபாய் 229.39 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

44. பெருநகர சென்னை காவல் துறையில் செயற்கை நுண்ணறிவு உரையாடல் திட்டத்தை (Conversational Artificial Intelligence Solution) ChatBot, VoiceBot, Video Chat உள்ளிட்ட செயலிகள்மூலம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செயல்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 24)

செயற்கை நுண்ணறிவு கணினி மென்பொருள்மூலம் பொதுமக்களுடன் உரையாடி மனிதர்களைப் போலவே

அவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்க Chat Bot, Voice Bot, Video Chat மூலம் நேரடியாக மக்களுடன் அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் Video Bot என்ற தொழில்நுட்பத்துடன்கூடிய கணினி இயந்திரங்கள் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்கப்பட்டு மக்களுக்கு சேவை செய்திட ஏதுவாக, ரூபாய் 395 இலட்சம் செலவில் (3 ஆண்டுகளுக்கு) திட்டம் தயாரிக்கப்பட்டு, இவ்வாண்டில் 131.62 இலட்சம் வழங்கப்படும்.

45. காவல் நிலையங்களுக்கு/காவல் கண்காணிப்பாளர்கள்/ மாநகர காவல் ஆணையர்கள் ஆகியோருக்கு சிறப்பான குற்றப் புலனாய்வு, குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருதல் ஆகியவற்றிற்கு சுழற்கேடயம் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 25)

குற்றப்புலன் விசாரணையைத் துரிதப்படுத்துவதிலும், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதிலும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதிலும் சிறப்பாக பணியாற்றிய காவல் நிலையங்களுக்கு அந்தந்த காவல் கண்காணிப்பாளர்/ காவல் ஆணையர் அவர்களால் சுழற்கேடயம் ஒன்று ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்படும்.

அதேபோல சிறப்பாகச் செயல்பட்ட மாவட்ட கண்காணிப்பாளர்களுக்கும், காவல் ஆணையாளர்களுக்கும் காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களால் ஒவ்வொரு காலாண்டும் சுழற்கேடயம் ஒன்று வழங்கப்படும்.

IV. புதிய காவல் நிலையங்கள், உட்கோட்டங்கள், பிரிவுகள் உருவாக்குதல்/மறுவரையறை செய்தல்

46. தாம்பரம் ஆணையகரத்திற்குட்பட்ட கிளாம்பாக்கம் பேருந்து நிறுத்தத்தில் காவல் நிலையம் அமைக்கப்படும் (அறிவிப்பு எண் 26)

தாம்பரம் ஆணையரகத்திற்குட்பட்ட விரைவில் திறக்கப்படவுள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிறுத்தத்தின் முக்கியத்துவத்தினைக் கருதி அங்கே ஒரு புதிய காவல் நிலையம் தேவையான பணியாளர்களுடன் ரூபாய் 655.91 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

47. நுண்ணறிவுப் பிரிவில் தீவிரவாதத் தடுப்புப் பிரிவு (Anti–Terrorism Squad) அமைக்கப்படும் (அறிவிப்பு எண் 29)

தீவிரவாதநடவடிக்கைகளைத்திறமையாகஎதிர்கொள்வதற்காக மாநில நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக தீவிரவாத தடுப்புப் பிரிவு (Anti Terrorism Squad) ஒன்று 383 பணியாளர்களைக் கொண்டு ரூபாய் 5,751.61 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

48. சேலம் மாவட்டத்தில் உள்ள ஆட்டையாம்பட்டி மற்றும் காரிப்பட்டி காவல் நிலையங்கள் சேலம் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும் (அறிவிப்பு எண் 30)

சேலம் மாவட்டத்தில் உள்ள ஆட்டையாம்பட்டி மற்றும் காரிப்பட்டி காவல் நிலையங்கள் நிருவாக வசதிக்காக சேலம் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். இதன்மூலம் சேலம் மாநகர காவல் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்குச் சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

49. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள துடியலூர், கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி காவல் நிலையங்கள், கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும் (அறிவிப்பு எண் 31)

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள துடியலூர், கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி காவல் நிலையங்கள் நிருவாக வசதிக்காக கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். இதன்மூலம் கோயம்புத்தூர் மாநகர காவல் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்குச் சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

50. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மங்கலம் காவல் நிலையம், திருப்பூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும் (அறிவிப்பு எண் 32)

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மங்கலம் காவல் நிலையம் நிருவாக வசதிக்காக திருப்பூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். இதன்மூலம் திருப்பூர் மாநகர காவல் ஆணையரகத்தின் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்குச் சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

51. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி மற்றும் திருப்பாலைவனம் காவல் நிலையங்கள், ஆவடி மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும் (அறிவிப்பு எண் 33)

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி மற்றும் திருப்பாலைவனம் காவல் நிலையங்கள் நிருவாக வசதிக்காக ஆவடி மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். ஆவடி மாநகர காவல் ஆணையரகத்தின் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்குச் சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

52. மூன்று புதிய காவல் உட்கோட்டங்கள் உருவாக்கப்படும் (அறிவிப்பு எண் 34)

காவல் துறையில் நிருவாக காரணங்களுக்காகவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும் வேலூர் மாவட்டத்தில் அணைக்கட்டு காவல் உட்கோட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் காவல் உட்கோட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி காவல் உட்கோட்டம் ஆகிய மூன்று புதிய காவல் உட்கோட்டங்கள் தலா ரூபாய் 67.60 இலட்சம் என மொத்தம் ரூபாய் 2.03 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் மக்களுக்குச் சிறந்த காவல் சேவையை வழங்க இயலும்.

V. புதிய கட்டடங்கள் கட்டுதல்

53. கடலூர் மாவட்டம், திருப்பாதிரிபுலியூரில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் புதிதாகக் கட்டப்படும் (அறிவிப்பு எண் 41)

கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு 2002 முதல் கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் இயங்கி வருகிறது. எனவே, அங்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்று ரூபாய் 186.49 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்படும்.

54. சேலம் மாநகர ஆயுதப் படைக்கு அன்னதானப்பட்டியில் மோப்பநாய் கூடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 42)

சேலம் மாநகர ஆயுதப்படைக்கு அன்னதானப்பட்டியில் மோப்பநாய் கூடம் (Dog Kennel) ஒன்று ரூபாய் 133.35 இலட்சம் செலவில் கட்டப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

55. 137 காவல் நிலைய கட்டடங்கள் புனரமைக்கப்படும் (அறிவிப்பு எண் 43)

காவல் நிலையங்களுக்கு வந்து செல்லும் பொது மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தரவும், அங்கு பணிபுரியும் காவலர்களுக்கு நல்ல சூழலை உருவாக்கவும், மாநிலத்திலுள்ள 137 காவல் நிலைய கட்டடங்கள் ரூபாய் 10 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

VI. புதிய காவல் வாகனங்கள் வாங்குதல்

56. கழிவு செய்யப்பட்ட காவல் துறை வாகனங்களுக்குப் பதிலாக ரோந்து பணிகளை மேற்கொள்ள 200 புதிய இருசக்கர வாகனங்கள் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 44)

உதவி காவல் ஆய்வாளர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொள்வதற்கு இருசக்கர வாகனங்களின் பயன்பாடு மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே அவர்களின் பயன்பாட்டிற்காக 200 புதிய இருசக்கர வாகனங்கள் ரூபாய் 200 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

57. கழிவு செய்யப்பட்ட காவல் துறை ஈப்புகளுக்குப் பதிலாக 283 புதிய வாகனங்கள் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 45)

மாநிலத்திலுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு முக்கியமாக, சரக எல்லைகளுக்குட்பட்ட மிக முக்கிய பிரமுகர்களின் வழிக்காவல் பணி, சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பவங்கள், குற்றங்களைத் தடுப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது உள்ளிட்ட பல்வேறு முனைகளில் காவல் துறையின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ஈடாக 283 நான்கு சக்கர வாகனங்கள் ரூபாய் 28 கோடி செலவில் வாங்கப்படும்.

58. சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறைக்கு 5 நான்கு சக்கர இழுவை வாகனங்கள் மற்றும் 5 இருசக்கர இழுவை வாகனங்கள் வாங்கப்படும் (அறிவிப்பு எண் 46)

சென்னை பெருநகரில் அதிகரித்து வரும் வாகனப் பெருக்கத்தின் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இப்போக்குவரத்து நெரிசலை நெறிப்படுத்திட 5 நான்கு சக்கர இழுவை வாகனங்கள் மற்றும் 5 இருசக்கர இழுவை வாகனங்கள் ரூபாய் 200 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

VII. புதிய பதவிகள் உருவாக்குதல்

59. தளவாய் (சிறு ஆயுதங்கள்) (Commandant, Small Arms) பதவி காவல் துறை துணைத் தலைவர் (சிறு ஆயுதங்கள்) பதவியாகத் தரம் உயர்த்தப்படும் (அறிவிப்பு எண் 47)

இந்திய காவல் பணி சாராத அலுவலர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அளிக்கும் விதமாக, தளவாய் (சிறு ஆயுதங்கள்) பதவி காவல் துறை துணைத் தலைவர் தரத்திற்கு உயர்த்தப்படும்.

60. தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமையிடத்தில் உள்ள மண்டல காவல் துணைக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவியாகத் தரம் உயர்த்தப்படும் (அறிவிப்பு எண் 48)

திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமையிடங்களில் உள்ள மண்டல காவல் துணைக் கண்காணிப்பாளர் (4) பதவிகள் மண்டல கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவிகளாக ரூபாய் 4.59 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.

61. நுண்ணறிவுப் பிரிவிற்கு கூடுதல் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவர் (அறிவிப்பு எண் 49)

நுண்ணறிவுப் பிரிவில் தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ள ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்)-1, உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்)-14 ஆகியோர் கூடுதலாக ரூபாய் 201.33 இலட்சம் செலவில் ஒதுக்கீடு செய்யப்படுவர்.

62. தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் (தலைமையகம் மற்றும் வெளியிடம்) பணியிடங்கள் உருவாக்கப்படும் (அறிவிப்பு எண் 50)

5-வது காவல் ஆணையத்தின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் (தலைமையகம் மற்றும் வெளியிடம்) பணியிடங்கள் ரூபாய் 31.80 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

63. மத்திய குற்றப் பிரிவிற்கும் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் (TNPID Act) பதிவு செய்யப்படும் வழக்குகளை கையாள்வதற்கும் தனிப்பிரிவை உருவாக்கி கூடுதல் காவல் பணியாளர்களை நியமித்தல் (அறிவிப்பு எண் 51)

மத்திய குற்றப் பிரிவு திறம்பட செயலாற்ற வேண்டி காவல் பணியாளர்களின் எண்ணிக்கையை 224 ஆக உயர்த்தவும், தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ், பதிவு செய்யப்படும் வழக்குகளைக் கையாளவும் தனிப்பிரிவு ரூபாய் 2,711.78 இலட்சம் செலவில் கூடுதல் காவல் பணியாளர்களுடன் உருவாக்கப்படும்.

64. மாவட்ட குற்றப் பிரிவு/மாநகர குற்றப் பிரிவு ஆகிய பிரிவுகளைப் பலப்படுத்தும்பொருட்டு, தீவிர குற்றத் தடுப்புப் பிரிவு ஒன்றிணைக்கப்படும் (அறிவிப்பு எண் 52)

புகார்களுக்கு விரைவாக தீர்வு காணவும், புலன்விசாரணையின் தரத்தை உயர்த்தவும் மாவட்ட குற்றப் பிரிவு/மாநகர குற்றப் பிரிவு ஆகிய பிரிவுகளைப் பலப்படுத்தவும், தீவிர குற்றத் தடுப்புப் பிரிவின் 24 குழுக்கள் ஒன்றிணைக்கப்படும்.

VIII. நிதி அதிகாரங்களை மாற்றியமைத்தல் விதிகள்/ ஒழுங்குமுறைகள் திருத்தம் செய்தல்

65. காவலர் பயிற்சி கல்லூரியில் பணியாற்றும் அதிகாரபூர்வ விரிவுரையாளர் மற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் (Honorarium) உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 53)

விவரம்	தற்போதைய மதிப்பூதியம்	உயர்த்தப்படும் மதிப்பூதியம்
கௌரவ விரிவுரையாளர் மதிப்பூதியம்	ஒரு மணி நேரத்திற்கு ரூ.250/–	ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,000/–
கௌரவ விரிவுரையாளரின் போக்குவரத்து செலவினம்	ரூ.100/–	ரூ.250/–
அதிகாரபூர்வ விரிவுரையாளர் மதிப்பூதியம்	ஒரு மணி நேரத்திற்கு ரூ.100/–	ஒரு மணி நேரத்திற்கு ரூ.500/–

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

66. காவலர் பயிற்சி கல்லூரி காவல் அதிகாரிகளின் நிதி அதிகார வரம்பு தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 54)

பதவி (காவல் பயிற்சிக் கல்லூரி)	நிதி வரம்பு
காவல் கண்காணிப்பாளர்	ரூ.10,000/–
காவல் துறை துணைத் தலைவர்	ரூ.20,000/–
காவல் துறை தலைவர்	ரூ.40,000/–
கூடுதல் காவல் துறை இயக்குநர்	ரூ.40,000/–க்கு மேல்

67. ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளான காவல் துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள்மீது விரைந்து தீர்வு காண காவல் துறை தலைவர்/கூடுதல் காவல் ஆணையாளர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 55)

(அ) மாவட்ட காவல் துறையில் பணியாற்றும் சார்பு ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தற்போது கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) வசம் உள்ளது. இவ்வதிகாரம் மண்டல காவல் துறைத் தலைவர் அவர்களுக்கு வழங்கப்படும்.

(ஆ) சிறப்புப் பிரிவுகளில் பணியாற்றும் சார்பு ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அந்தந்த காவல் துறைத் தலைவர் அவர்களுக்கு வழங்கப்படும்.

(இ) சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவல் ஆணையரகங்களில் பணியாற்றும் சார்பு ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தற்போது கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) வசம் உள்ளது. இவ்வதிகாரம் அந்தந்த மாநகர கூடுதல் காவல் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

68. அரசு காவல் வாகனங்களுக்கு சிறிய அளவிலான பழுது நீக்கம் (petty & minor repairs) செய்வதற்கு தளவாய்களுக்கான நிதி வரம்பு உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 56)

கடந்த 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலுள்ள தளவாய்களுக்கு வழங்கப்பட்ட சிறு அளவிலான பழுது நீக்கங்களுக்கான நிதி அதிகார வரம்பு மறு ஆய்வு செய்யப்பட்டு பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகிறது:

வகைப்பாடு	இலகுரக வாகனங்கள்		கனரக வாகனங்கள்	
	தற்போதைய வரம்பு (ரூ.)	உயர்த்தப்படும் வரம்பு (ரூ)	தற்போதைய வரம்பு (ரூ.)	உயர்த்தப்படும் வரம்பு (ரூ.)
பழுது நீக்கம்	400	600	600	1,200
மோட்டார் பழுது நீக்கம்	1,500	5,000	3,150	10,000
டயர் புதுப்பித்தல்	900	—	2,250	5,000

69. அரசு காவல் வாகனங்களுக்கு பெரிய அளவிலான பழுதுநீக்கம் செய்வதற்கு தளவாய் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான அதிகாரிகளின் நிதிவரம்பு உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 57)

கடந்த 2010 ஆம் ஆண்டு தளவாய் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பெரிய அளவிலான பழுது நீக்கங்களுக்கான நிதி அதிகார வரம்பு மறு ஆய்வு செய்யப்பட்டு பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகிறது:

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

பதவி	தற்போதைய வரம்பு (ரூ.)	உயர்த்தப்படும் வரம்பு (ரூ.)
காவல் துறை இயக்குநர்	1,00,000/–	1,50,000/–
கூடுதல் காவல் துறை இயக்குநர்	1,00,000/–	1,25,000/–
காவல் துறை தலைவர்	75,000/–	1,00,000/–
காவல் துறை துணைத் தலைவர்	40,000/–	75,000/–
தளவாய் / காவல் கண்காணிப்பாளர்	20,000/–	50,000/–

70. புலன் விசாரணையின்போது தனியார் வாகனங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும், அவசரகால செலவினங்களை மேற்கொள்ளவும் ஒவ்வோர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும் (அறிவிப்பு எண் 58)

போக்சோ வழக்கு மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளைக் கையாளும்போது அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அதில் பாதிக்கப்பட்டோரின் பாதுகாப்புக் கருதி தனியார் வாகனங்களைப் பயன்படுத்தி மருத்துவமனை அல்லது நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்ல ஏதுவாக, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். தற்போது இதற்கென எந்த வாகனமும் ஒப்பளிக்கப்படவில்லை. காவல் நிலைய வாகனமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

IX. காவலர் நலன்

71. அனைத்து தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளில் பணியாற்றும் காவலர்களுக்கு வார விடுமுறை அளிக்கப்படும் (அறிவிப்பு எண் 63)

காவல் துறையில் மற்ற பிரிவுகளில் உள்ள காவல் பணியாளர்களைப் போலவே தமிழ்நாடு சிறப்புக் காவல்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

அணிகளில் பணியாற்றும் காவலர்களுக்கும் வார விடுமுறை அளிக்கப்படும்.

72. உயர் பதவிகளில் உள்ள காவல் துறை அதிகாரிகள் (துணை காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறை இயக்குநர் வரை) வழங்கும் பண வெகுமதி (money reward) தொகையை இரு மடங்காக உயர்த்தி வழங்குதல் (அறிவிப்பு எண் 64)

ஐந்தாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி, தனிப்பட்ட காவலருக்கும், காவலர் குழு அளவிலும் துணை காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான காவல் உயர் அதிகாரிகளுக்கு பண வெகுமதி வழங்கப்பட்டு வருகின்றது. காவல் துறையினர் மேலும் சிறப்பாகப் பணியாற்றிட அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பண வெகுமதிக்கான வரம்பு பின்வருமாறு இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்:

பதவியின் பெயர்	தற்போதைய நிதி வரம்பு		உயர்த்தப்படும் நிதி வரம்பு	
	நபர் ஒருவருக்கு (ரூ.)	குழு ஒன்றுக்கு (ரூ.)	நபர் ஒருவருக்கு (ரூ.)	குழு ஒன்றுக்கு (ரூ.)
காவல் துறை இயக்குநர்/கூடுதல் காவல் துறை இயக்குநர்	1,000/–	10,000/–	2,000/–	20,000/–
காவல் துறை துணைத் தலைவர்	500/–	5,000/–	1,000/–	10,000/–
காவல் கண்காணிப்பாளர்	600/–	3,000/–	1,200/–	6,000/–
துணை காவல் கண்காணிப்பாளர்	100/–	1,000/–	200/–	2,000/–

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

73. பெருநகர சென்னை காவல் துறையின் ஆயுதப்படை பிரிவில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ.20/–லிருந்து ரூ.40/–ஆக உயர்த்தி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 65)

தற்போது பெருநகர சென்னை காவல் துறையில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு உணவுப்படியாக ரூ.30/– (அரசு நிதி–ரூ.20 மற்றும் பெற்றோர் நிதி–ரூ.10) வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளின் நலன் கருதி, ஊட்டச்சத்துமிக்க உணவு வழங்குவதற்கான உணவுப்படி ரூபாய் 60/–ஆக (அரசு நிதி–ரூபாய் 40 மற்றும் பெற்றோர் நிதி–ரூபாய் 20) உயர்த்தி வழங்கப்படும்.

74. காவலர் அங்காடி வசதி ஊர்க்காவல் படையினருக்கும் விரிவுபடுத்தப்படுதல் (அறிவிப்பு எண் 67)

காவலர் அங்காடி வசதியை தற்போது மாநிலத்திலுள்ள அனைத்து காவல் பணியாளர்களும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வசதியின் பயன்பாட்டினை கருத்தில்கொண்டு இத்திட்டம் ஊர்க்காவல் படையினருக்கும் விரிவுப்படுத்தப்படும்.

75. காவலர் மருத்துவமனை வசதி ஊர்க்காவல் படையினருக்கும் விரிவுபடுத்தப்படுதல் (அறிவிப்பு எண் 68)

மாநிலத்தில் பல இடங்களில் காவலர்களுக்கென மருத்துவமனைகள் அனைத்து வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இவ்வசதி ஊர்க்காவல் படையினருக்கும் விரிவுப்படுத்தப்படும்.

76. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு ரூபாய் 50 இலட்சம் சுழல்நிதி வழங்கப்படும் (அறிவிப்பு எண் 69)

போதைப் பொருள் மற்றும் மனமயக்க மருந்துகள் சட்டம், 1985-ன்கீழ், பறிமுதல் செய்யும் இனங்களில் காவல் துறை அதிகாரிகள்/ஆளினர்கள்/தகவல் தெரிவிப்பவர்களுக்கு வெகுமதி வழங்கிட ஏதுவாக ரூபாய் 50 இலட்சம் சுழல்நிதி வழங்கப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

77. சென்னையில் ஆலந்தூர் மற்றும் கொண்டித்தோப்பில் உள்ள காவல் குடியிருப்புகளில் உடற்பயிற்சிக் கூடம், நூலகம் மற்றும் கல்வி மைய வசதிகள் ஏற்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 70)

காவலர்களின் நலனை கருத்திற்கொண்டு சென்னையிலுள்ள ஆலந்தூர் மற்றும் கொண்டித்தோப்பில் உள்ள காவலர்களின் குழந்தைகளை கல்வி மற்றும் விளையாட்டில் வழிநடத்த உடற்பயிற்சிக் கூடம், நூலகம் மற்றும் கல்வி மையம் போன்ற வசதிகள் ரூபாய் 800 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

X. பல்வகை

78. மோப்ப நாய்கள் (190)/மோப்ப நாய்களைக் கையாள்பவர்களுக்கு வழங்கப்படும் உணவு, பராமரித்தல் மற்றும் தடுப்பூசிக்கான (feeding, grooming & vaccination) படி உயர்த்தப்படும் (அறிவிப்பு எண் 72)

i. ஒரு நாளைக்கு ஒரு மோப்ப நாய்க்கு வழங்கப்படும் உணவுப் படி ரூ.200/–லிருந்து ரூ.300/– ஆக உயர்த்தப்படும்.

ii. பணியிலுள்ள மோப்ப நாய்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பராமரித்தல் படி ரூ.300/–லிருந்து ரூ.1,100/– ஆகவும், பணியிலிருந்து ஓய்வுபெற்ற மோப்ப நாய்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பராமரித்தல் படி ரூ.200/–லிருந்து ரூ.1,100/– ஆகவும் உயர்த்தப்படும்.

iii. மோப்ப நாய்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிக்கான படி ரூ.950/–லிருந்து ரூ.2,030/– ஆகவும் (முதல் ஆண்டு), இரண்டாம் ஆண்டு முதற்கொண்டு ரூ.450/–லிருந்து ரூ.740/– ஆகவும் உயர்த்தப்படும்.

மோப்ப நாய்களை கையாள்பவர்களுக்கான தடுப்பூசிப்படி ரூ.750/–லிருந்து ரூ.1,050/– ஆகவும் (முதல் ஆண்டு), இரண்டாம் ஆண்டு முதற்கொண்டு ரூ.250/–லிருந்து ரூ.350/– ஆகவும் உயர்த்தப்படும்.

79. குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சிறை வைப்பதற்காக தயாரிக்கப்படும் புத்தகங்களுக்கான செலவுத் தொகை ரூ.8,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தப்படும் (அறிவிப்பு எண் 73)

எழுதுபொருள்களின் விலை உயர்வை கருத்திற்கொண்டு, குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும்

வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சிறை வைப்பதற்காக தயாரிக்கப்படும் புத்தகங்களுக்குத் தேவைப்படும் எழுதுபொருட்கள் வாங்கவும், ஆவணங்களை மொழிபெயர்ப்பு செய்யவும் செலவிடப்படும் தொகையை ஒவ்வொரு வழக்கிற்கும் ரூபாய் 8,000/–லிருந்து ரூபாய் 12,000/– ஆக உயர்த்தப்படும்.

தடய அறிவியல் துறை

80. திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதியதாக மரபணு ஆய்வுப் பிரிவு உருவாக்கப்படும் (அறிவிப்பு எண் 74)

பெண்களுக்கு எதிராக குற்றங்கள் மற்றும் போக்ஸோ சட்டம் தொடர்பான வழக்குகள் சம்பந்தப்பட்ட சான்று பொருட்களை விரைந்து ஆய்வு செய்து தடய அறிவியல் ஆய்வறிக்கைகளை வழங்குவதன்மூலம் குற்றப் புலனாய்வில் தொய்வு ஏற்படாமல் இருக்க ஏதுவாக, திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதியதாக மரபணு ஆய்வுப் பிரிவு ரூபாய் 10.15 கோடி செலவில் உருவாக்கப்படும்.

81. தடய அறிவியல் துறையில் சிறப்பாகப் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் வழங்கப்படும் (அறிவிப்பு எண் 76)

தடய அறிவியல் துறையில் பணியாற்றும் அறிவியல் அலுவலர்களின் சிறப்பான சேவைக்காக ஆண்டுதோறும் தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் சீர்மிகு பணிப் பதக்கம் வழங்கப்படுகிறது. அதுபோல இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இரண்டு பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் பணிப் பதக்கம் ரூபாய் 25 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

82. குற்றவியல் நீதி பரிபாலன அமைப்பின் சிறப்பான செயல்பாட்டிற்காக இ–தடய தளத்தில் வழக்கு விவரங்கள் மற்றும் அறிவியல் ஆய்வறிக்கைகளை பதிவேற்றம் செய்வதற்குரிய கட்டமைப்பு தடய அறிவியல் ஆய்வகங்களில் உருவாக்கப்படும் (அறிவிப்பு எண் 77)

நீதிமன்றங்களிலிருந்து தடயவியல் ஆய்வுக்குப் பெறப்படும் வழக்குகளின் நிலை மற்றும் ஆய்வறிக்கைகளின் விவரங்களை

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

இ-தடய தளத்தில் பதிவேற்றம் செய்வதன்மூலம் நீதிபரிபாலன அமைப்பின் செயல்பாடு மேலும் வலுப்பெறும். ஆகவே, தடய அறிவியல் துறையின் தலைமை மற்றும் 10 வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் அதற்குரிய கட்டமைப்பு ரூபாய் 185.80 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

83. தடய அறிவியல் நிபுணர்கள் காணொலி கூட்டரங்கு வாயிலாக நீதிமன்றங்களில் சாட்சியம் அளிப்பதற்குரிய உட்கட்டமைப்பு தலைமை மற்றும் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் உருவாக்கப்படும் (அறிவிப்பு எண் 78)

தடய அறிவியல் நிபுணர்கள் நேரடியாக பல்வேறு நீதிமன்றங்களுக்குச் சென்று சாட்சியம் அளிப்பதற்கு மாற்றாக, காணொலி கூட்டரங்கு வாயிலாக சாட்சியம் அளிப்பதன்மூலம் காலவிரயமின்றி மேலும் நிலுவையிலுள்ள வழக்குகளை நிபுணர்கள் குறைக்க ஏதுவாக அமையும். ஆகவே, தடய அறிவியல் துறையின் தலைமை மற்றும் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் அதற்குரிய உட்கட்டமைப்பு ரூபாய் 109 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

84. குற்ற வழக்குகளில் பெறப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களின் துப்பாக்கியியல் ஆய்வுகளை மேற்கொள்ள துப்பாக்கி குண்டின் வேகத்தை அளவிடும் அதிநவீன கருவி வாங்கப்படும் (அறிவிப்பு எண் 80)

சென்னை தலைமை தடய அறிவியல் ஆய்வகத்தில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களின் துப்பாக்கியியல் ஆய்வுகளைத் தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக, அதிநவீன துப்பாக்கி குண்டின் வேகத்தை அளவிடும் கருவி ஒன்று ரூபாய் 50 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

85. திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் உருவாக்கப்படும் (அறிவிப்பு எண் 82)

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிர்வாக சீரமைப்பின் ஒரு பகுதியாக மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட தென்மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் ஒன்று உருவாக்கப்படும்.

II. வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

86. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாவட்ட அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 7 ஈப்புகள் (Jeeps) கொள்முதல் செய்யப்படும் (அறிவிப்பு எண் 85)

அவசர காலங்களில் முதன்மைப் பொறுப்பாளர்களாகப் பணிபுரியும் அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாவட்ட அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 7 ஈப்புகள் (Jeeps) தலா ரூபாய் 8.47 இலட்சம் என்ற அளவில் மொத்தம் ரூபாய் 59.26 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

87. கடற்கரைப் பகுதியில் ரோந்து மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மூன்று அனைத்து நிலப்பரப்பு வாகனங்கள் (All Terrain Vehicle) கொள்முதல் செய்யப்படும் (அறிவிப்பு எண் 86)

கடல் அலையில் சிக்குபவர்களை விரைந்து சென்று மீட்கவும், கடற்கரைப் பகுதியில் ரோந்து மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் திருச்செந்தூர், வேளாங்கண்ணி மற்றும் கன்னியாகுமரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு ஓர் ஊர்தியின் விலை ரூபாய் 16.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் 48.00 இலட்சம் செலவில் 3 அனைத்து நிலப்பரப்பு வாகனங்கள் (All Terrain Vehicle) வாங்கப்படும்.

88. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும் (அறிவிப்பு எண் 87)

புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அவசரகால பதில் செயல்பாடு ஆதார அமைப்புடன் (ERSS) (நாடு முழுவதுமான எண் 112) ஒருங்கிணைந்து திறம்பட செயலாற்றும் வகையில் அந்நிலையங்களின் பயன்பாட்டிற்காக 27 கணினிகள் மற்றும் 14 மொபைல் டேட்டா டெர்மினஸ் (Mobile Data Terminus (Rugged Tablet)) ஆகியவை ரூபாய் 37.90 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

III. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களை மேம்படுத்துதல்

89. சென்னை புறநகர் மாவட்டம், பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் மேம்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 88)

மக்கள்தொகை வளர்ச்சி, விரைவான தொழில்மயமாக்கல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு சென்னை புறநகர் மாவட்டம், பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ரூபாய் 79.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

90. மத்திய சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் மேம்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 89)

அதிகரித்து வரும் மக்கள்தொகையினைக் கருத்தில்கொண்டு, மத்திய சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ரூபாய் 79.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

91. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரகத்தில் உள்ள அவசரகால கட்டளை மையம் (Incident Command Centre) வலுப்படுத்தப்படும் (அறிவிப்பு எண் 90)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் சேவைகளை சரியான நேரத்தில் முடுக்கிவிட ஏதுவாக, இயக்குநரகத்தில் உள்ள அவசரகால விபத்து கட்டளை மையம் (Incident Command Centre) *ரூபாய் 354 இலட்சம் செலவினத்தில் நவீனப்படுத்தப்படும்.*

IV. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்

92. திருவல்லிக்கேணி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 91)

திருவல்லிக்கேணி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 594.38 இலட்சம் செலவினத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

93. சேலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 92)

சேலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 608.00 இலட்சம் செலவினத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

94. ஸ்ரீரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் (அறிவிப்பு எண் 93)

ஸ்ரீரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 485.51 இலட்சம் செலவினத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

V. கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல்

95. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் (அறிவிப்பு எண் 94)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக தற்போது ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் ரூபாய் 2.04 கோடியுடன் மேலும் ரூபாய் 2.00 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

VI. பணியாளர் நலன்

96. தீயணைப்புப் பணியாளர்களின் சேமநல நிதிக்கான மானியம் (Benevolent Fund) உயர்த்தி வழங்குதல் (அறிவிப்பு எண் 95)

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு தற்போது அரசால் வழங்கப்படும் சேமநல நிதிக்கான (Benevolent Fund) மானியம் ரூபாய் 20.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 40.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

97. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான செலவினத் தொகையின் உச்சவரம்பு உயர்த்தப்படும் (அறிவிப்பு எண் 96)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மண்டல அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு தற்போது ஒவ்வொரு மண்டலத்திற்கும் வழங்கப்பட்டு வரும்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

செலவினத் தொகை தலா ரூபாய் 1.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.00 இலட்சமாக மும்மடங்கு உயர்த்தப்படும். மேலும், மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் செலவினத் தொகை ரூபாய் 3.00 இலட்சம் இருமடங்கு உயர்த்தப்பட்டு, ரூபாய் 6.00 இலட்சமாக வழங்கப்படும்.

98. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மெரினா மீட்புப் பணிகள் நிலைய பணியாளர்களுக்கு இடர்ப்படி வழங்கப்படும்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மெரினா மீட்புப் பணிகள் நிலையத்தில் பணிபுரியும் 14 பணியாளர்களுக்கு இடர்ப்படி ரூ.6,000/– ஆக வழங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூபாய் 10.08 இலட்சம் ஆகும்.

99. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்குக் கட்டப்படும் குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு (Plinth Area) அதிகப்படுத்தப்படும்

காவல் துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு அதிகப்படுத்தி வழங்கப்பட்டுள்ளதற்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கட்டப்படும் குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்படும்:

பதவி	தற்போதைய பரப்பளவு (சதுர அடி)	உயர்த்தப்படும் பரப்பளவு (சதுர அடி)
தீயணைப்போர்/முன்னணித் தீயணைப்போர்/தீயணைப்போர் ஓட்டுநர்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்	650	750
நிலைய அலுவலர்/நிலைய அலுவலர் (போக்குவரத்து)	724	850
மாவட்ட அலுவலர்	843	1,000
துணை இயக்குநர்/இணை இயக்குநர்	1,273	1,500

2023 ஏப்ரல் 21] [திரு. மு.க. ஸ்டாலின்]

VII. புதிய முயற்சிகள்

100. நடைமுறையில் உள்ள பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள் திட்டத்தை வலுப்படுத்த தன்னார்வலர்களுக்கு அடையாள வில்லை (Badge) மற்றும் மதிப்பூதியம் (Honorarium) வழங்கப்படும்

பாதுகாப்பு தன்னார்வலர்களின் சேவைகளைப் பெருக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும், மாநிலம் முழுவதிலும் பல ஆண்டுகளாக தன்னார்வலர்களாகப் பணியாற்றி வரும் 200 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நடவடிக்கைகளில் முறையாகப் பயிற்சி அளிக்கவும், அடையாள வில்லை மற்றும் மதிப்பூதியம் வழங்கவும் ரூபாய் 76.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

VIII. புதிய பணியிடம் உருவாக்குதல்

101. காவல் துறை தலைமை இயக்குநர்/இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக சட்ட விவகாரங்களில் உதவிட இயக்குநரகத்தில் சட்ட ஆலோசகர் என்ற புதிய பணியிடம் உருவாக்கப்படும்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகளில் உறுதி ஆவணம் தயாரித்தல், முக்கிய பிரச்சினைகளில் சட்டக் கருத்தை வழங்குதல் மற்றும் நீதிமன்றங்களில் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர், அரசு வழக்குரைஞர் ஆகியோர்களுக்கு உதவுதல் ஆகிய சட்ட விவகாரங்களில் உதவிட, சட்ட ஆலோசகர் என்ற புதிய பணியிடம் ஒன்று தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரகத்தில் உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள, கோரிக்கை எண் 22-காவல் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான வெட்டுத் தீர்மானங்களையும், கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்த வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்தேன். அவை விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில் நிதிநிலைமைக்கு ஏற்ப, படிப்படியாக நிறைவேற்றப்பட அரசு உறுதியாகப் பரிசீலிக்கும்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 21

நான் ஏற்கெனவே கூறியதுபோல, மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறைகளின் தேவைகளை, கோரிக்கைகளை இந்த அரசு உறுதியாக உரிய முறையில் நிறைவேற்றித் தரும். அவற்றுக்குப் போதிய விளக்கங்களை என்னுடைய பதிலுரையிலும் அளித்திருக்கிறேன்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்னுடைய அந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய துறைகளின் (மேசையைத் தட்டும் ஒலி) மானியக் கோரிக்கைகளை தயார் செய்வதில் உதவிபுரிந்த உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களுக்கும், சென்னை பெருநகர காவல் ஆணையர் அவர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அவர்களுக்கும் மற்றும் காவல் துறையிலுள்ள மற்ற பிரிவுகளின் துறை சார்ந்த தலைவர்களாக இருக்கக்கூடிய காவல் துறை தலைமை இயக்குநர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுவகையான cryptocurrency மோசடியில் ஏதாவது வழக்கு பதியப்பட்டிருக்கிறதா என்பது குறித்த விவரங்கள் இருந்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

2023 ஏப்ரல் 21]

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) 20–4–2023 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.21,55,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) 20–4–2023 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

7. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*